
சூரியப் புதல்வர்கள்
நவம்பர் 27
மாவீரர் நாள்
1998

“

காலம் தொகுத்துக்கொண்டிருக்கிறது
நெடுநாளைக்குப் பிறகு
ஒரு
புறநானூறு

”



ஓவியம்: மருது


வீரவேங்கை. கிளிமொழி
20

# “இறந்துபோனோரின் அமைதியைக் கெடுத்தவர்கள் இறவாதோருக்கும் நிம்மதியை அளிக்கமாட்டார்கள்”



“இனத்துவேசப் பகை உணர்வினால் தூண்டப்பட்ட பேரினவாதம் தமிழினத்தால் என்றுமே மன்னிக்கமுடியாத ஒரு படுபாதகச் செயலில் இறங்கியது. யாழ் குடாநாடு எதிரிப்படைகளின் கைகளில் வீழ்ந்தபோது இந்த வேதனைக்குரிய சம்பவம் நடைபெற்றது.

தமிழீழத்தாயின் மடியில் நித்திய உறக்கத்தில் ஆழ்ந்திருந்த எம்மினிய மாவீரர்களின் ஆன்ம அமைதி எதிரியால் குலைக்கப்பட்டது. அவர்களது கல்லறைகள் இடித்துத் தரைமட்டமாக்கப்பட்டன. அவர்களது துயிலும் இல்லங்கள் அழிக்கப்பட்டன. அவர்களது நினைவுச் சின்னங்கள் சிதைக்கப்பட்டன. புனிதர்களாக சரித்திர நாயகர்களாக தேசிய வீரர்களாய் தமிழீழ மக்களால் பூசிக்கப்படும் மாவீரர்களின் புதைகுழிகளை மாசுபடுத்தி அவர்களது புனிதத் தலங்களான துயிலும் இல்லங்களை சிதைத்தழித்த இச் செயலை மிகவும் அநாகரிகமான கீழ்த்தரமான இழிசெயல் என்றே நான் கூறுவேன்”.

“ஆக்கிரமிப்பு இராணுவத்தின் அடாவடித்தனமான இச் செயலை சிறுமைப்படுத்திவிட முடியாது. இது மிகவும் பாரதூரமான பயங்கரவாதச்செயல். தமிழீழத்தின் தேசிய ஆன்மாவில் நீங்காத கறை ஏற்படுத்திய இந்த அவச்செயலுக்கு சிங்களப் பேரினவாத அரசு பொறுப்பேற்க வேண்டும்.

இந்தப் பண்பற்ற செயல் ஒரு உண்மையைப் பகர்கின்றது. அதாவது சிங்கள தேசத்தை ஆண்டுவரும் இனவாத ஆட்சியாளர்கள் தமிழர்களின் உணர்வுகளுக்கு என்றுமே மதிப்பளிக்கப்போவதில்லை. அத்துடன் தமிழ்மக்களின் தேசிய அபிலாசைகளைப் புரிந்து அவர்களுக்கு நீதியும் வழங்கப்போவதில்லை. இறந்துபோனோரின் அமைதியையே கெடுப்பவர்கள் இறவாதோருக்கு நிம்மதியைக் கொடுப்பார்களென நான் கருதவில்லை”.

– தமிழீழத் தேசியத் தலைவர் மேதகு வேலுப்பிள்ளை பிரபாகரன் அவர்களின் 1997ம் ஆண்டு மாவீரர்நாள் செய்தியிலிருந்து

## விடுதலையை எம்முள் உயிர்ப்பிப்பவர்கள்

லெப்டினன் சங்கரில் இருந்து ஆரம்பித்து ஒன்று பத்தாகி நூறாகி பல்லாயிரமாய் தமிழீழப் பரப்பெங்கும் துயில் கொள்ளும் இவர்கள் தமிழீழத்தின் காவல் தெய்வங்கள். எம் அனைவர் மீதும் அன்பு கொண்டவர்களை, எமது தேசத்தின் மீது பற்றுக் கொண்ட வீரபுருசர்களை, எமது தேசம் அன்னியருக்கு அடிமை ஆகாமல் எமக்கென்றாய் இருக்கப் போராடியவர்களை நினைவு கூரும் நாள்.


இவர்களின் விடுதலைக்கான பயணமே ஈழத்தமிழர்களின் வரலாறாகியுள்ளது. இவர்களின் இலட்சியப் பயணத்தை தொடர்வதற்கு இன்னும் இன்னும் தியாகங்களை புரிய நாம் தயாராகவுள்ளோம். விடுதலையின்பால் நம் மக்கள் கொண்டுள்ள அவா, அதற்கான அவர்களின் பங்களிப்புகள் வீண்போகாது எம்முள் உறுதியை மென்மேலும் பெருக்குகின்றது. இன்னும் எம் வேகத்தை அதிகரிக்கும் அதிக பலத்தை எமக்குக் கொடுக்கும்

இவர்களின் தியாகங்கள் வீண்போகாது. இலட்சியம் ஈடேறும் நாள் வெகுதூரம் இல்லை. இருண்டுபோய் அன்னியரின் வரலாறாக மாறி இருந்த எம் வரலாற்றை எம்முடையதாய் மாற்றுவதற்கு இவர்கள் செய்த தியாகங்கள் அளப்பெரியது; ஊன் உறக்கமற்றது; உறவு மற்றது. காடு மேடெல்லாம் அலைந்து ஈற்றில் அடையமுடியாத உன்னத நிலையை அடைந்தவர்கள். கடலிலே எரிந்தும் காற்றிலே கலந்தும், இயற்கையுடன் இணைந்தவர்கள். தமிழீழத்தை தழுவும் கடலிலும் வீசும் காற்றிலும் இருந்து விடுதலையை எம்முள் உயிர்ப்பிப்பவர்கள். சாகாவரம் பெற்ற சிரஞ்சீவிகளாய் உலகம் உள்ளவரை இவர்கள் இருப்பார்கள். இன்னும் ஒருதடவை நாம் அன்னியர்க்கு அடிபணியாமல், அழிந்து போகாமல் எம் சந்ததிக்குள்ளும், இவர்கள் வாழ்வார்கள். இவர்கள் நினைவு எம்முடன் இருக்கும்வரை நாம் யாருக்கும் அடிபணியோம்.

**புலிகளின் தாகம் தமிழீழத்தாயகம்**

அனைத்துலகச் செயலகம்
தமிழீழ விடுதலைப் புலிகள்





# தற்கொடை அரசியல்

கடந்த 1987–ம் ஆண்டு ஜெயவர்த்தனாவின் ஆணைப்படி சிங்களப்படை யாழ்ப்பாணத்தை நோக்கி முன்னேறிக் கொண்டிருந்தது. புலிப்படை அவர்களை எதிர்த்துக் கடுஞ்சமர் புரிந்த போதிலும் சிங்களப் படையின் முன்னேற்றத்தைத் தடுக்க இயலவில்லை. புலிப்படை இப்போது போல் அப்போது நேருக்கு நேர் போர் புரியும் ஆற்றலைப் பெற்றிருக்கவில்லை. அது இன்னமும் கெரில்லாப் படையாகவே இருந்து வந்தது.

என்றாலும் எப்படியாவது சிங்களப்படையைத் தடுத்து நிறுத்தியாக வேண்டும். யாழப்பாணத்தைக் கைப்பற்றுவது சிங்களப் பேரினவாதத்துக்கு இராணுவ வகையிலும் அரசியல் வகையிலும் குறிப்பிடத்தக்க வெற்றியாக அமைந்துவிடும். தமிழீழ விடுதலைப் போரைப் பொறுத்தவரை அதே அளவுக்குப் பின்னடைவு ஆகிவிடும். அதனால் தமிழீழ மக்கள் பெருஞ் சோர்வு கொள்வார்கள். சிங்களப் படையைத் தடுத்து நிறுத்துவது எப்படி? ஆள் வகையிலும், ஆயுத வகையிலும் மிகக் குறைந்த வலிமையுடைய புலிப் படை இதைச் சாதிப்பது எப்படி?

இந்த வினாக்களுக்கு மில்லரின் தற்கொடை விடையாயிற்று. நெல்லியடித் தாக்குதல் பகைவனின் திட்டங்களை நிர்மூலமாக்கியது. தமிழீழ விடுதலைப் போருக்கு ஏற்படவிருந்த பின்னடைவைத் தடுத்து நிறுத்தியதோடு புலிப் படையில் புதிய பிரிவு ஒன்றையும் பிறப்பித்தது. அதிசய மனிதர்களாய் உலகம் அறிந்து வியக்கிற கரும்புலிகளில் முதலாமவரே மில்லர்.

காற்றும் புகமுடியாத காவலரண்களில் கரும்புலிகள் புகுந்து தாக்கியிருக்கிறார்கள். நெருங்கவும் முடியாத படைத் தளங்களுக்குள் ஊடுருவித் தாக்கியிருக்கிறார்கள். பென்னம் பெரிய போர்க் கப்பல்களைக் கரும்புலிகளின் சின்னஞ்சிறு படகுகள் தகர்த்துச் சின்னாபின்னமாக்கி மூழ்கடித்துள்ளன.

கரும்புலிகள் சாதித்திருக்கும் வியக்கத்தக்க வெற்றிகளின் இரகசியம் இதுதான். உலகில் வேறெவரும் ஏந்தாத ஆயுதத்தை அவர்கள் ஏந்தியுள்ளார்கள். அவர்களின் உயிரே அந்த ஆயுதம்! கரும்புலிகளின் உயிராயுதத்திற்கு விடை சொல்லும் கருவி ஏதும் சிங்களத்தானிடமும் இல்லை, அவனுக்கு ஆயுதங்கள் விற்பவர்களிடமும் இல்லை.

கரும்புலிகளின் புகழார்ந்த அணி வரிசையில் ஆண்களுக்கு நிகராகப் பெண்களும் இடம்பெற்று வருவதை குறிப்பிட்டுச் சொல்ல வேண்டும். கடலுக்குள் மூழ்கி நீந்திச் சென்று தன்னையே வெடிகுண்டாக்கி பகைவனின் இராட்சதப் போர்க் கப்பலை நொறுக்கி மூழ்கடித்த அங்கயற்கண்ணியை மறக்கமுடியுமா?

போரியல் நோக்கமொன்றை நிறைவேற்றுவதற்காக தன்னைத்தானே அழித்துக் கொள்ளும் இந்தத் தற்கொடைப் போர் முறை வரலாற்றில் எப்போது அறிமுகமாயிற்று? இரண்டாம் உலகப் போரில் ஜப்பானியர்கள் ஓரளவுக்கு இந்த முறையைக் கையாண்டார்கள். அவர்களது விமானப் படையில் ஒரு தற்கொடைப் பிரிவு அமைக்கப்பட்டது. இந்தப் பிரிவைச் சேர்ந்தவர்கள் “கமிக்காசி” என அழைக்கப்பட்டனர். இவர்கள் விமானங்களிலிருந்து குண்டு போடுவதற்குப் பதிலாக விமானங்களையே குண்டுகளாக்கிப் பகை இலக்குகளைத் தாக்கித் தகர்த்து தாமும் அழிந்து போவார்கள். அந்த விமானங்களில் இலக்கை அடையும் அளவுக்குத் தான் எரிபொருள் நிரப்பப்பட்டிருக்கும். திரும்பிவர விரும்பினாலும் அதற்கு எரிபொருள் இருக்காது. இரண்டாம் உலக யுத்தத்தின் போது ஹவாய்த் தீவில் முத்துத் துறைமுகத்தில் (Pearl Harbor) அமைந்திருந்த அமெரிக்க கடற்படைத் தளத்தைத் தாக்குவதற்கு ஜப்பானியர்கள் இந்தப் போர் முறையைக் கையாண்டார்கள் என்பது செய்தி.

ஆனால், கமிக்காசி வீரர்கள் இந்தத் தியாகம் மனிதகுல முன்னேற்றத்திற்கு இசைவான எந்த உன்னத இலட்சியத்திற்காகவும் செய்யப்பட்டதன்று. எந்த அயல் ஆதிக்கத்திலிருந்தும் ஜப்பான் தேசத்தை விடுவிப்பதற்காக அவர்கள் இதைச் செய்யவில்லை. உண்மையில் ஜப்பானிய ஆளும் கும்பலின் உலகாதிக்கப் பாசிசக் கனவுகளை நிறைவேற்றுவதற்காகவே அவர்கள் உயிர்ப்பலியானார்கள்.

**தியாகு**
திலீபன் மன்றம் – தமிழ்நாடு

வியட்னாமிய விடுதலைப் போரிலும் தற்கொடைப் போர்முறை கையாளப்பட்ட தருணங்கள் உண்டு. சைக்கோன் இராணுவத் தலைமையகத்தில் அமெரிக்கப் படைத் தள பதிகளும் அவர்களின் கைப்பாவைகளான தென் வியட்னாமிய அதிகாரிகளும் கூடிப் பேசியபோது அந்த இடத்திற்குள் ஊடுருவி நுழைந்து குண்டு வைத்துத் தகர்ப்பதற்கு விடுதலைப் படை திட்டமிட்டது பற்றி ஒரு கதைச் சித்திரமே வெளிவந்தது.

அந்தக் குழுவில் ஒரு பெண் இருக்கிறாள். அவளுடைய காதலனும் இருக்கிறான். மனித வெடிகுண்டாகச் சென்று செயல்முடிக்க அவள் முன்வருகிறாள். மற்றவர்களும் அதை ஏற்றுக் கொள்கிறார்கள். அவள் புறப்படுவ தற்கு முன் காதலன் கேட்கிறான்: 'அன்பே! நாம் சேர்ந்து வாழ்வது பற்றிக் கண்ட கனவு கள் எத்தனை? நீ போகத்தான் வேண்டுமா?'

அவள் சொன்னாள்: "உண்மைதான். நீ என்னைக் காதலித்தாய். நான் உன்னைக் காதலித்தேன். ஆனால் நீ என்னைக் காத லித்ததை விடவும் நான் உன்னைக் காதலித் ததை விடவும், நாம் நம் தேசத்தைக் காதலித் தோம், காதலிக்கிறோம்."

உலக வரலாற்றில் வியட்னாமிற்குப் பின் இந்த வீரம் அரங்கேறுவது தமிழீழ மண்ணில் தான். பார்க்கப் போனால் 30 ஆண்டு காலம் நடைபெற்ற வியட்னாமிய விடுதலைப் போருடன் ஒப்பிடுகையில் தமிழீழ விடுத லைப் போர் மிகக் குறுகிய காலத்தில் மிகப் பெரியளவில் தற்கொடைப் போர்முறையை பயன்படுத்தியிருக்கக் காணலாம்.

அரசியல் என்பது இரத்தம் சிந்தாத போர், போர் என்பது இரத்தம் சிந்துகிற அரசியல் என்றார் மா ஓ சேதுங். ஆம், அரசியல் நீண்டுதான் போராகிறது. விடுத லைப் போருக்கு விடுதலை அரசியல்தான் அடிப்படை. ஒரு தேசம் தன்னை உணரவும் தன் அடையாளத்தை நிலை நிறுத்தவும் அயலாதிக்கத்தைத் தூக்கி எறிந்து விடுதலை பெறவும் போராடுவதுதான் விடுதலை அரசியல். இந்த அரசியல் போராட்டத்தைப் பகைவன் இராணுவ வழியில் அடக்கவும் சிதைக்கவும் விடாப்பிடியாக முயலும் போது அதற்கெதிராக விடுதலைப்போராட்டம் இரா ணுவ வடிவம் பூணுவது தவிர்க்கமுடியாததா கிறது.

ஒடுக்கப்பட்டுக் கிடக்கும் ஒரு தேசிய இனத்தால் பன்முகப் படை வலிமையோடும் பன்னாட்டுப் பிற்போக்கின் பின் பலத்தோ டும் வருகிற பகைவனுக்கு முகம் கொடுக்க முடியுமா? அவனை வெல்ல முடியுமா? இந்த வினாக்களுக்குக் கிடைத்த விடைதான் கெரில்லாப் போர் முறை. உலகின் பல்வேறு விடுதலைப் போர்க் களங்களின் இந்தப் போர் முறையின் மகத்துவம் மெய்ப்பிக்கப் பட்டுள்ளது. தியாகத்துக்கு அஞ்சாத ஒரு சிறு கெரில்லாப் படையினால் அதி நவீன ஆயுதங்கள் ஏந்திய பெரும் எதிரிப் படை யையும் முறியடிக்க முடியும்.

வியட்னாமிய விடுதலைப் போரில் தீன் பின் பூ, தமிழீழ விடுதலைப் போரில் முல் லைத்தீவு, கிளிநொச்சிப் போர்கள் இதனை மெய்ப்பித்துக் காட்டின. கெரில்லாப் படை கள் மக்களின் ஆதரவைப் பெற்றவை. விடு தலை இலட்சியத்திற்காகப் போர் புரிபவை. பிற்போக்கு அரச படைகளோ மக்களுக்கு எதிரானவை. கூலிக்காகச் சண்டையிடுபவை என்பதை மறந்துவிடக்கூடாது.

கெரில்லாப் போர் முறையின் உயர்நிலை தான் தற்கொடைப் போர்முறை. விடுதலைப் படைகளுக்கு ஆகக் குறைந்த இழப்புடன் பகைவனுக்கு ஆகப்பெரும் இழப்பை ஏற் படுத்துகிற போர் முறை இது. சிங்களப் பேரி னவாதத்தின் மூர்க்கத்தனமான முப்படைத் தாக்குதலால் தமிழீழ மக்கள் பல்லாயிரக் கணக்கில் சாவுக்கும் கொடும் காயங்களுக் கும் வன் பெயர்வுக்கும் ஆளாகியிருக்கிறார் கள். பெரியளவிலான மனித இழப்புக்களை எவ்வளவு காலம்தான் ஈழத்தமிழினத்தால் தாங்கிக்கொண்டிருக்க முடியும்?. இந்தப் பின்னணியில் இரக்கம் பாராத பகைவனை இரக்கம் பாராமல் வீழ்த்துவதும் விரைவா கக் குறுகிய காலத்தில் இதைச் செய்து முடிப் பதும் வரலாற்றுத் தேவையாகியுள்ளன.

தமிழீழ விடுதலைப் போராட்டத்தின் இந்த வரலாற்றுத் தேவைக்கு ஈடுகொடுக் கின்ற விதத்தில்தான் புலிப்படைத் தலைவர் பிரபாகரன் தற்கொடைப் போர்முறையை வகுத்துத் திறம்படச் செயலாக்கி வருகிறார். மரபு வழிப் போர் முறை நூறு பேரைக் கொண்டு சாதிப்பதை கெரில்லாப் போர் முறை பத்துப் பேரைக் கொண்டு சாதிக்கும். அதன் உயர் வடிவமாகிய தற்கொடைப் போர் முறையோ ஒரேயொருவரைக் கொண்டு சாதித்துவிடும். தமிழீழ விடுதலைப் போர்க் களத்தில் இந்த உண்மை மீண்டும் மீண்டும் மெய்ப்பிக்கப்பட்டுள்ளது.

பகைவனைக் கதிகலங்கச் செய்வதிலும் மக்களை ஊக்கப்படுத்தி அணி திரட்டுவதி லும் கரும்புலிகளின் தியாகம் வகுத்துள்ள பங்கு மகத்தானது. தற்கொடைப் போர் முறையின் அரசியல் முக்கியத்துவம் இதிலும் கூட வெளிப்படுகிறது.

சாகத் துணிந்தவனும் கூட சவத்தைப் புதைப்பதற்கு ஆறடி நிலத்திற்கு ஏங்குகிறான். எரிப்பதற்கோ புதைப்பதற்கோ மிச்சமேதும் இல்லாமல் காற்றில், நீரில், நிலத்தில் கரைந்து மறைந்து போன கரும்புலிகளுக்கு விடுதலை பெற்ற தேசமே வெற்றிப் பரிசு.



# தாலாட்டும் வாய்களில்

# ஈழத் தேசியப் பாடல்

கற்கள் அல்ல
நடப்படுவது
கனத்த நினைவுகள்

பதியனிடப்படுகிறது
மண்ணுக்கு முந்தி
மனத்தில்

ஊன்றப்பட்ட ஒவ்வொரு கல்லும்
குருதி நாளங்களில்
வேர்கள் பரப்பி...

கண்களின் வழியே
செந்தளிர் விரிக்கும்
கபாலத்தில் ஆயிரம்
கனல்பூ மணக்கும்

புதைந்த மக்களின்
புதையாத நினைவுகள்
உள்ளக் கிளையில்
உட்கார்ந்து படபடத்து
சொல்லில்
நூறு சிறகுகள் விரித்து
வானகம் மூடும்


வையகம் பார்க்கும்
ஈழமென்ற இளைய நாட்டை
ஒவ்வொரு சிறகிலும்
விடியல் எழுதும்

நடுகல் நினைவுகள்
இமயமாய் வளரும்

கண்ணீரில் நனைந்த
நடுகற்கள் மீது
புன்னகைப் பூக்களை
அன்னையர் தூவ

தாலாட்டுப் பாடிய
தண்டமிழ் வாய்கள்
ஈழ தேசியப் பாடலை இசைக்க

மறுக்கப்பட்ட மானிட விடுதலை
தெற்கில் ஒரு புள்ளியில்
முளைத்தது என்று....
விடுதலை அவாவும்
தேசிய இனங்கள்
சேர்ந்திசை பாடும்
திருநாள் கூடும்



**இன்குலாப்**
தமிழ்நாடு

# எழுத முனைந்து ஓய்ந்து விழுந்த பேனாக்கள் இரண்டின் கதை

அவர்கள் இருவரும் வெளியீட்டுப் பிரிவின் நீண்டகால உறுப்பினர்கள். பூமணி 1991–இலும் ஜெயஜோதி 1992–இலும் வெளியீட்டுப் பிரிவிற்கு வந்தவர்கள். இருவருமே கணக்கு விடயத்தில் ஆர்வமாக இருந்ததால் நிதி சார்ந்த வேலைகளுக்கே விடப்பட்டார்கள். பூமணி 'சுடர்' வியாபார நிறுவனத்தின் நிர்வாகியாகவும், ஜோதி வெளியீட்டுப் பிரிவின் நிதிப் பொறுப்பாளராகவும் கடமையாற்றினார்கள்.

இருவருமே சரியான கலகலப்பு. இருவருக்குமே நாலு முழ நீளத்தில் வாய். ஆனால் சபையொன்றில் அரங்கேறுவதற்கு மட்டும் கொஞ்சம் கூச்சம். பூமணி ஒரு சிறந்த நிர்வாகி. வெளிப்படையாகவே கதைப்பார்கள். ஆனால், சபையேறுதலில் நூறுவீதம் பின்னடிப்பார்.

இந்த சபைக்கூச்சத்தை விலக்குவதற்காக பிரிவிலுள்ள போராளிகள் ஒவ்வொரு வாரமும் கவியரங்கு செய்வதென்று முடிவெடுத்தோம். ஒவ்வொரு ஞாயிறும் கொடுக்கப்படும் தலைப்பின்கீழ் கவிதை எழுதி, சற்று உயரமான படியொன்றின் மேல் ஏறி நின்று வாசிக்க வேண்டும். எல்லோருக்குமே சொல்லியாயிற்று. வந்தது ஞாயிற்றுக்கிழமை.

பூமணிக்கு இரவில் ஒழுங்காக நித்திரை கூட வரவில்லை. காலை விடிந்து ஞாயிறு வராமல் இருந்தாலென்ன என்றெல்லாம் யோசித்தார். யார் என்ன பிரார்த்தனை செய்து என்ன பலன்? விடிந்துவிட்டது. எழுத முயற்சிப்பதும், சரிவராமல் கிழிப்பதுமாக பூமணிக்கு உயிரே போவதுபோல் இருந்தது. எமது தளம் அமைந்திருந்த இடத்தில் புகையிரதப் பாதை இருந்து. அந்தப் பாதையால் நடந்து அப்படியே நீர்கொழும்பில் இருக்கும் தன் அம்மாவிடம் மறுநாளுக்குள் போய்ச் சேர்ந்துவிடுவேன் என்று அவர் மிரட்டியும், நாங்கள் அசையவில்லை.



ஜோதி உட்பட எங்கள் எல்லோருக்குமே பூமணியைப் பார்க்கச் சிரிப்பாக இருந்தது. ஈழந்து எழுத்தாளர் எஸ். பொன்னுத்துரையின் 'நனைவிடை தோயல்' நூலை வாசித்துவிட்டு,

"அட! இப்படியும் எழுதலாம் எண்டா நானும் நிறைய எழுதுவேனே" என்று பூமணி சொன்னதிலிருந்து அவரை நாங்கள் இடையிடையில் 'எஸ்.பொ.' என்றே கூப்பிடுவோம். ஏனெனினல் எஸ்.பொவின் எழுத்துப் போலத்தான் பூமணியின் இயல்பான உரையாடல் இருக்கும். பூமணியின் தந்தையின் முதல் எழுத்தும் 'எஸ்'தான். இவரின் பெயரின் சுருக்கமும் 'எஸ்.பி' ஆக இருப்பதால்தான் 'எஸ். பொ'வும் பூமணியும் ஒரேமாதிரி எண்டெல்லாம் கிண்டல் செய்வோம். பூமணி எதையுமே வெளிப்படையாக – வழமையாகக் கதைக்கும் விடயத்தைக் கூட எழுத முடியாமல் திணறியதைப் பார்க்க எங்களுக்குப் பாவமாக இருந்தது. ஆனால் ஆளை இப்படியே விடக்கூடாது என்பதில் நாங்கள் உறுதியாக இருந்தோம்.

"உங்கட எஸ்.பொ மாதிரி ஒரு கவிதை எழுதினால் கூட பரவாயில்லை பூமணி நாங்

கள் சிரிக்கமாட்டோம்" என்று சொல்லி விட்டு வந்துவிட்டோம்.

அன்றைய கவி அரங்கின் தலைப்பு 'கனவு'. பூமணியின் கனவு என்னவாக இருக்கும் என்று நாங்கள் எங்களுக்குள் கதைத்துக்கொண்டோம். பூமணி தன் ஊரில் க.பொ.த. (உயர்தர) கணிதம் படித்தபோது வகுப்பில் உள்ள (ஆண்) மாணவர்களுக்குள் தான் மட்டும் தனி ஒரு மாணவியாக படித்தது பற்றி, பின்னர் கொழும்பில் உயரக் குதிக்கால் செருப்புடன் (ஆள் சரியான குள்ளம்) தான் வாழ்ந்த காலம் பற்றி, 'கோல் பேஸ்' கடற்கரையிலும், கொழும்பு மிருகக்காட்சி சாலையிலும் பொழுதைக் கழிக்கும் இளைஞர் பற்றியெல்லாம் கதை கதையாகச் சொல்லும் போதே பூமணியின் கண்களில் கனவுகள் விரியும். இதற்குள் எதை இப்போது தன் கவிதைக் கனவில் காணுவார் என்று நாங்கள் சிரித்துக்கொண்டோம்.

மாலையில் எல்லோரும் கூடினோம். ஒவ்வொருவராகக் கவிதைகளை வாசித்தார்கள். ஜோதி கொஞ்சம் தடுமாறினாலும் ஒரு மாதிரியாக வாசித்துவிட்டார். கடைசியாக பூமணி.

"நான் மேலே ஏறல்ல. இதிலை நிண்டு வாசிக்கிறன்" என்று கெஞ்சி, இருந்த இடத்திலேயே எழும்பி நின்றார். ஒரு நிமிடம்... இரண்டு நிமிடம்.... ஐந்து நிமிடம் என எல்லோரும் பூமணியின் முகத்தைப் பார்த்துக்கொண்டு நின்றோம். பூமணியும் தன் தாளைப் பார்த்துக்கொண்டே நின்றார்.

"என்ன பூமணி, வாசியுங்கோவன்!"

"என்னை ஒருத்தரும் பார்க்கவேண்டாம். நான் வாசிக்கமாட்டன். எனக்கு வாசிக்க வருகுதில்லை" என்று சொல்ல, உடனேயே நாங்கள் எல்லோரும் நிலத்தைப் பார்க்க பூமணி மெல்ல மெல்ல தன் கவிதையை அரங்கேற்றினார். அந்த இருவத்தொரு அடிக் கவிதையை வாசித்து முடிக்குமுன் பூமணிக்கு வியர்த்து விறுவிறுத்தது. மேல் மூச்சு கீழ் மூச்சு வாங்கி, குரல் தடுமாறி, கண்கள் கலங்கி....

"என்ன பூமணி இது?" என்று நாங்கள் ஆறுதல் சொல்ல,

"அடுத்தமுறை நான் நல்லாகச் செய்வேன்" என்று அழுகைக்கிடையில் பூமணி உறுதி எடுத்துக்கொண்டார்.

அடுத்த ஞாயிறு கவியரங்கம் 'மலரும் நினைவுகள்'. எல்லோருக்கமே அது இரண்டாவது அனுபவம் என்பதால் பரவாயில்லாமல் செய்தார்கள். ஜோதியின் கவிதையில் முன்னேற்றம் தெரிந்தது. பூமணி தன் கவிதையை குரலில் ஏற்ற இறக்கத்தோடு, அபிநயம் பிடித்து வாசித்த விதம் எங்கள் எல்லோருக்குமே உற்சாகத்தை ஏற்படுத்திவிட்டது.

"இது பூமணியின் நனைவிடை தோயல்' என்று பாராட்டினோம்.

தளத்திலுள்ள போராளிகள் எல்லோரையும் விட பூமணி வயதில் மிகவும் கூடியவர். பூமணியின் குழந்தைத்தனமான நடவடிக்கைகளும், குழப்படிகளும் அவரின் வயதை எல்லோருக்கும் மறக்கச் செய்துவிடும். எல்லோருக்கும் பெரியவராக இருந்த பூமணி, தனக்கு வந்த சவாலை இரண்டாவது வாரத்திலேயே வெற்றிகொண்டார். இந்த அனுபவம் பின்னர் பல இடங்களில் கைகொடுத்தது.

யாழ்ப்பாணத்தை சிறீலங்காப் படைகள் கைப்பற்றியதன் பின் எட்டு மாத காலம் தொடர்ச்சியாக வலிகாமப் பகுதியில் நின்றபோது பல சவால்களை பூமணி எதிர்கொண்டார். எதிரியின் நடமாட்டத்திற்கு நடுவே நடமாடி, காட்டிக்கொடுக்க முன்வருவோரின் கண்களில் மண்ணைத் தூவி, மக்கள் மனங்களில் இடம்பிடித்து கடமையை சரிவரச் செய்யவேண்டுமே என்று உயிரைக் கையில் பிடித்துக்கொண்டு கண்விழித்துக் கொண்டிருந்த காலத்தில்தான் இங்கே ஜெயசிக்குறுய் படையினர் மீது 1997–08–01–ல் எம்மவர்களால் நடாத்தப்பட்ட ஊடறுப்புத் தாக்குதலில் ஜோதி வீரச்சாவு அடைந்தார். தோழியின் வீரச்சாவுச் செய்தி யாழ். மண்ணிலிருந்து திரும்பிவந்த பிறகுதான் பூமணிக்குத் தெரியும்.

பூமணி தன்னை போராளியாக இணைத்துக்கொண்ட போது நீர்கொழும்பில் இருந்த அம்மா, ஏழு வருடங்களின் பின் தன் மகளைச் சந்திப்பதற்காக வந்திருந்தார். தன் வாழ்க்கையில் முதன்முதலாக அப்போது தான் பெண் போராளிகளை, அதுவும் தன் மகளையே ஒரு போராளியாக அந்தத் தாய் சந்தித்தார். தன் பாசத்தை எப்படி வெளிப்படுத்துவது என்று தெரியாமல், எங்கள் எல்லோருக்குமே தன் நேசத்தைத் தந்துவிட்டு, கண்ணீருடன் திரும்பிச் சென்றார்.

தான் சுகமாப் போய்ச் சேர்ந்துவிட்டதாக அந்தத் தாயிடம் இருந்து கடிதம் வந்து சேருமுன், "உங்கள் மகள் *1998–02–01–ல்* கிளிநொச்சி படைத்தளம் மீதான தாக்குதலில் வீரச்சாவடைந்தார்" என்ற செய்தியை நாம் அவருக்கு அனுப்பினோம்.

('சுதந்திரப் பறவைகள்' இதழிலிருந்து)

> கவிதை என்றால் என் கவி
> கேட்க உமக்கு செவியிருக்காது
> செந்தமிழுடன் பைந்தமிழும்
> என் வாய் வழி வரும்
> கொழும்புப் பக்கம் போக ஆசை
> கோட்டை அழிக்க ஆசை
> என்னனென்னவோ நினைக்கிறேன்
> எண்ணியதைச் செய்ய தவிக்கிறேன்
> முடியாத காரணத்தால்
> மௌனமாக இருக்கிறேன்
> வண்ணமான என் கனவுகள்
> உம் முன் வைக்க
> ஒரு கோடி பனை ஓலை போதாது
>
> – பூமணியின் 'கனவு' கவிதையிலிருந்து

# நினைவுச் சின்னங்களால் நிமிர்ந்து நிற்கும் உலகம்!



இதுவரை நடந்து வந்த உலக வரலாற்றிடம் அதிசயங்களாக எஞ்சியிருப்பது ஏழே ஏழு விடயங்கள்தான். அதிசயங்களாகி விட்ட நினைவுச் சின்னங்களால் உருவாக்கப்பட்ட நம்பிக்கைகளால் நிமிர்ந்து நிற்பதே கண்முன் பரவியிருக்கும் எழுச்சி மிகு உலகம். பிரபஞ்சத்தில் தொங்கும் ஒவ்வோர் கிரகத்தின் இருத்தலுக்கும் ஒவ்வோர் காரணமிருக்கிறது. அந்த வகையில் சுதந்திரத்திற்காக வாழ்வு தந்தவர்களின் தியாகங்களை ஏந்தி உயிர்த்துடிப்புடன் இயங்கிக் கொண்டிருப்பது நம் பூமி. உதாரணமாக நாம் பூமியிலிருந்து சந்திரனைப் பார்ப்பதைப் போல சந்திரனிலிருந்து பூமியைப் பார்த்தால் பூமியிலுள்ள ஒரேயொரு கட்டிடம் கோடுபோல் விழுந்திருப்பதைக் காணலாம். இதுவே சீனப் பெரும் சுவராகும். அங்கிருந்து மேலும் பூமியை அண்மித்தால் பிரான்சிலிருக்கும் 'ஐபில் கோபுரம்' பின் எகிப்தின் பிரமிட்டுக்கள் அடுத்து அமெரிக்க சுதந்திரச் சிலையென படிப்படியாக மனிதனால் உருவாக்கப்பட்ட சுதந்திரத்திற்கான முயற்சிகளே நம்மை வரவேற்கும். இவைகளெல்லாம் ஏன் அமைக்கப்பட்டன, இவற்றுள் மறைந்திருக்கும் வாழ்வியல் தொழில்நுட்பங்கள் யாதென ஆராய முற்படும்போதே வெற்றிபெற்ற உலக இனங்களின் வாழ்வியல் இரகசியங்கள் அடங்கிய தகவல் சுவடிகளை நாமும் மெல்ல வாசிக்க ஆரம்பித்து விடுகின்றோம்.

கல்லறையில் விளக்கேற்றி பணியும் மாவீரர் நாளின் மூலம் ஈழத் தமிழினம் எட்டித்தொட முனைவது வெறுமனே உணர்ச்சி பூர்வமான இலக்கையல்ல.

அதன் மறுபக்கமாக நிற்கும் சமூக எழுச்சியென்னும் பிரமிட்டைக் கட்டியமைப்பதுதான். இந்த உளவியல் உண்மையை விளங்குவதானால் மேற்சொன்ன உலக அதிசயங்களையும் அவை அமைக்கப்பட்ட தேவைகளையும் நோக்க வேண்டும். அந்தத் தகவல் படிக்கட்டுகளில் நின்று மாவீரர்களைப் பார்ப்பவர்களே அதன் பெருமை, மகத்துவம் ஆகியவற்றுக்கு அப்பால் அதன் தேவையும் அவசியமும் பற்றிய எண்ணங்களின் தார்ப்பரியங்களைத் தெட்டெனப் புரிந்து கொள்ள முடியும்.

இன்றுள்ள சீனப் பெருஞ்சுவரின் நீளம் சுமார் 6000 கி.மீ, ஆரம்பத்தில் இதை 2400 கி.மீ. நீளமுள்ள சுவராகக் கட்டி முடித்தவர் சீன மன்னர் ஹீ—ஹுவாங்—தி என்பவராவார். இற்றைக்கு 2200 ஆண்டுகளுக்கு முன்

னர் இது கட்டப்பட்டது. ஆக்கிரமிப்பு நோக்கத்துடன் சீனாவின் வடபகுதியில் புகுந்த ஹீணர்களுக்கெதிராக மூன்று இலட்சம் படை வீரர்களைத் திரட்டி போர் தொடுத்து தேசத்தை மீட்டதன் நினைவாக உருவாக்கப்பட்டதே அச்சுவராகும். இதைப் பார்க்கும் ஒவ்வோர் செஞ்சீனாவின் குடிமகனும் தேசபக்தியென்னும் உளவியல் உறுதியைப் பெற்றுக் கொள்கிறான். இந்த எண்ணமே இரண்டாயிரம் ஆண்டுகளாக அந்த நாட்டை உலகின் எந்தச் சக்தியுமே வீழ்த்திவிடாதவாறு செய்திருக்கிறது. அடுத்த நூற்றாண்டில் உலகின் முதல் வல்லரசாக வருமெனக் கணிப்பிடப்படும் சீனாவிற்கு அத்தகைய எழுச்சி தரும் உளவியல் அடிப்படையாக அமைந்ததும், அமைந்து கொண்டிருப்பதும், அந்நாட்டின் நினைவுச் சின்னமான சீனப் பெரும் சுவரே!

உலகத்திலேயே ஓர் புரட்சியின் மூலம் மன்னராட்சியை ஒழித்து, சாதாரண மனிதரான நெப்போலியனை ஆட்சிபீடம் ஏற்ற வழிவகுத்த நாடு பிரான்ஸ். உலகப் புரட்சிகளுக்கெல்லாம் ஆதர்ச பூமியாக விளங்கியது பிரான்ஸ். அதுபோல உலகத்தின் முன்னோடிப் புரட்சியும் பிரெஞ்சுப் புரட்சிதான். அந்த மகத்தான புரட்சியின் நூற்றாண்டு விழா 1889—ம் ஆண்டு கொண்டாடப்பட்டது! அதன் நினைவாகக் கட்டப்பட்டதே ஐபில் கோபுரமாகும். 1672 படிக்கட்டுகளுடன் 9700 தொன் எடையுடன் 70 இலட்சம் துளைகளால் இணைக்கப்பட்ட இந்தக் கோபுரத்தின் உச்சிக்குச் சென்றால் நாற்பது மைல் சுற்றளவைப் பார்க்கலாமென்பதை விட, வேறொரு செய்தியே அதில் மறைந்திருக்கிறது. தேசபக்தியென்பது பிரான்சியர்களின் உள்ளங்களில் இரும்புத் தூண்களாக வடிவமைக்கப்பட வழிசமைத்த அடிப்படை உணர்வு இந்தக்கோபுரமே. இல்லாவிட்டால் இரண்டு உலக யுத்தங்களையும் எதிர்கொண்டு தம் தேசத்தைக்காத்த எஃகு இதயத்தை பிரான்சியர்கள் பெற்றிருக்க முடியாது.

பிரிட்டனின் காலனித்துவ நாடாக விளங்கிய அமெரிக்கா சுதந்திரம் பெற்று இப்போது 222 வருடங்கள் தான் ஆகின்றன. அமெரிக்க சுதந்திரத்தின் நினைவுச் சின்னமாக சுதந்திர சிலையை கையில் சுடரேந்திய படி வடிவமைத்து அமெரிக்கர்களுக்கு பரிசளித்தவர்களும் பிரான்சியர்கள்தான். பிரெஞ்சு நாட்டின் சிற்பி அகஸ்டஸ் பார்தோல்டியால் வடிவமைக்கப்பட்ட இச்சிலை 1884—ல் செய்து முடிக்கப்பட்டாலும் கூட அதன் அடியில் அமெரிக்கா சுதந்திரம்பெற்ற தினமான 1776 யூலை 4ம் திகதியென்றே குறிப்பிடப்பட்டுள்ளது. நியூயோர்க்கிற்கு அருகில் 'லிபர்டி ஐலன்டில்' பத்து அடித் தளங்களுடன் 152 அடி உயரமுள்ள இந்தச் சிலை நிற்கிறது. சுதந்திரத்திற்காக தியாகித்தோருக்கு அடையாளமாக நிற்கும் இச்சிலையின் பெயரே "சுதந்திரம்" என்பதுதான். நமது அண்டை நாடான இந்தியாவும் இதற்கு விதிவிலக்கல்ல 'என்மகன் உயிர் நீத்தமைக்காக நான் வருத்தப்படவில்லை! அவன் வழியில் வீர இளைஞர்கள் போரில் குதிக்க வேண்டும் தேசம் விடுதலை பெறவேண்டும்' என்று ஓர் குரலை அங்கிருந்து உலகம் கேட்டது. அதற்குரியவர் மாவீரர் பகத்சிங்கின் தாயாரான வித்தியாவதிதேவிதான். 1931 மார்ச் 23ம் திகதி பகத்சிங் உயிர்நீத்ததன் நினைவுச் சின்னமாக ஹசைனிவாலரில் அமைக்கப்பட்ட நினைவுத்தூபியை பஞ்சாப் மக்கள் தமது சுதந்திரத்தின் அடையாளமாகவே போற்றுகின்றனர்.

மேற்கண்ட விடயங்களையெல்லாம் ஓர் நேர் கோட்டு வடிவில் அடுக்கிப் பார்த்தால் இவைகள் எல்லாமே விடுதலைக்கு விதையாகி கல்லறைகளில் துயில்வோரின் மீது மனித குலம் கொண்டுள்ள மரியாதைகளின் வெளிப்பாடுகளே எனலாம். இந்த அடிப்படையில் உருவாக்கப்படும் நினைவுத்தூபிகளும் அதற்கான அஞ்சலிகளுமே மாவீரர் நாளின் நிகழ்வுகளாகின்றன. இதன்மூலம் கிடைக்கும் சமூக எழுச்சியை அடையாளம் காண பிரமிட்டுக்களின் கதையை இறுதியாக இணைவுபடுத்திக் கொள்ளவேண்டும். கிறிஸ்துவுக்கு மூவாயிரம் ஆண்டுகளிற்கு முன்னரே உலகின் முதலாவது பேரரசாக எழுந்து நின்றது எகிப்தியப் பேரரசாகும். வரலாற்றிலிருந்து நீக்கிவிடமுடியாது அந்தப் பேரரசை இன்றும் நிலை நிறுத்தி வைப்பதிருப்பது அக்காலத்து எகிப்தியரால் அமைக்கப்பட்ட பிரமிட்டுக்களே. அங்கிருந்த அரசு எப்படியானது? அவர்கள் ஏன் இத்தகைய பிரமிட்டுக்களை அமைத்தனரென்பதெல்லாம் 1822 வரை உலகில் எவருக்குமே தெரியாது. 1798ல் நெப்போலியன் எகிப்து மீது படையெடுக்கிறான். எகிப்துக் கோட்டையொன்றின் மீதான முற்றுகையின்போது இவனது போர்வீரர்கள் ஓர் சுரங்கத்தை அமைக்கிறார்கள். அத்தருணம் எதிர்பாராத விதமாக ஓர் கல் கிடைக்கிறது. இதில் பல தகவல்கள் பொறிக்கப்பட்டிருந்தன. ஆனால் நெப்போலியனால் இதை வாசித்தறிய முடியவில்லை. எனவே அக்கல்லை கப்பலில் ஏற்றி பிரான்சிற்கு அனுப்புகிறான். மத்தியதரைக் கடல் பகுதியில் வழிமறித்த ஆங்கிலேயர் அதைக் கொள்ளையடித்துச் செல்கிறார்கள். இன்றும் இலண்டன் மியூசியத்தில் இருக்கும் இக்கல்லிலுள்ள எழுத்துக்களே 'கிரோகிளிபஸ்' எனப்படும். இவைகளின் உட்பொருளை 1822ல் வில்லியம்ஸ் என்ற ஆங்கிலேயர் வாசித்தறிந்தார். அப்போதுதான் எகிப்தியப் பேரரசரின் பரபரப்பான வரலாறு உலகின் முன் ஆதாரபூர்வமாகத் தரிசனமாகியது. பிரமிட்டுக்களை எகிப்தியர்கள் ஏன் கட்டினார்கள் என்ற உண்மையை அறிய வழி பிறந்தது. இக்கேள்விக்குரிய பதிலுடன் ஏன் மாவீரர் நாளை நடத்த வேண்டுமென்ற

கி. செ. துரை

கேள்விக்குரிய பதிலையும் இணைத்துப் பார்ப்பதே மாவீரர் நாளுக்குரிய நவீன சிந்தனைகளாக அமையும்.

அக்கால எகிப்தியர்கள் மன்னனைக் கடவுளின் பிரதிநிதியாகக் கருதியிருக்கிறார்கள். (மன்னன் உயிர்த்தே மலர்தலை உலகம் என்பது அக்காலத் தமிழர்களின் கொள்கையும் கூட) இறப்பின் பின்னரும் மன்னன் கௌரவப்படுத்தப்பட வேண்டும். அப்பொழுதுதான் கடவுள் அருள்புரிவார். நைல் நதி கோபமடைந்து பெருக்கெடுக்காது, நமது வாழ்வும் அழிந்து போகாது என்று அக்கால எகிப்தியர்கள் எண்ணியிருக்கிறார்கள். தமது நாட்டை பேரரசாக உருவாக்கிய தேச சிற்பிகளை மதித்து, எல்லா மக்களும் ஒன்றிணைந்து பிரமிட்டுக்களை உருவாக்கினார்கள். இந்நிலையால் மக்களிடம் நிலவிய சகல பேதங்களும் அகன்றுபோயின. அவர்களின் ஒரேயொரு இலட்சியமும் உயிர் மூச்சும் பிரமிட்டுக்களாகவே இருந்தன. சமூகத்தை முறுக்கி ஒன்றிணைக்கும் இந்த உணர்வின் அச்சே உலகின் முதல் பேரரசை அமைத்தது. மக்கள் சக்தி என்னும் அசுர பலத்தை முகிழ்க்கச் செய்த மந்திரம் ‘பிரமிட்’ என்னும் கல்லறைகளின் உருவாக்கமே என்பதையறிந்து உலகம் மூக்கில் விரலை வைத்தது. இன்றுள்ள தமிழினமும் இதுபோன்றதோர் பலத்தைப் பெறவேண்டும். வாழ்ந்து கொண்டிருப்போரின் மனங்களிலுள்ள முரண்பாடுகள் தேச விடுதலைக்கு தடைக்கல்லாதல் கூடாது. முழுச்சமூகமும் அந்தத் தியாகிகளின் முன்னால் மரியாதை செலுத்தி விளக்கேற்றுவதன் மூலம் ஓர் அகவெளிச்சத்தைப் பெறவேண்டும். அது போராட்டத்திற்கான உந்துசக்தியாக அமைய வேண்டுமென்பதே மாவீரர்நாளின் உயரிய கருத்துக்களில் ஒன்றாகும்.

இலங்கைத்தீவில் வாழும் தமிழினத்தின் இரண்டாயிரமாண்டு வரலாறும் ஓர் சமாதியுடன்தான் ஆரம்பிக்கிறது. கலாநிதி ஜேம்ஸ் இரத்தினத்தின் ‘எல்லாளன் சமாதியும் வரலாற்று மோசடியும்’ என்ற நூலிலிருந்து இதற்குரிய சில தகவல்களைச் சேகரிக்க முடியும். எல்லாளன் போன்றதோர் வீரன் எப்படி ஐரோப்பிய மக்களிடையே கௌரவிக்கப்படுகிறான் என்பதை தமிழ் மக்கள் தவறாது அறிதல் அவசியம். இத்தாலிய தேசிய மாவீரரான கைடெரெல்லி என்பவன் கத்திச் சண்டையின்போது காலிடறி வீழ்ந்து மாண்டவன். 1501 மார்ச் 26ல் மரணமடைந்த இவ்வீரனுக்காக இத்தாலியில் ஓர் காவியமே படைக்கப்பட்டுள்ளது. உலகப் புகழ்பெற்ற இத்தாலியச் சிற்பி டுலியோ லோம்னெடெட்டா என்பவரால் வடிக்கப்பட்ட கைடெரெல்லியின் பளிங்குச்சிலை இன்றும் இத்தாலியின் கடற்கரை நகரமான ரேவன்னாவில் உள்ளது. ஒவ்வொரு நாளும் ஆயிரக்கணக்கான மக்கள் இந்த வீரனின் சிலைக்கு முத்தமிடுகிறார்கள். இது வரை 40இலட்சம் பேருக்குமேல் இம்மாவீரனின் சிலையை முத்தமிட்டுள்ளார்கள். இதற்கு எத்தனையோ நுற்றாண்டுகளுக்கு முன்னரே ஏறத்தாழ இது போன்ற முறையில் வீரமரணமடைந்தான் எல்லாளன். இன்றும் அனுராதபுரத்தில் உள்ள அவனது சமாதியின் முன் எரிந்து கொண்டிருக்கும் விளக்கு, தமிழினத்தின் தேசியத்தை மீட்டெடுக்கவேண்டிய தேவையை வேண்டி இரண்டாயிரமாண்டுகளாக மினுக்கிட்டுக் கொண்டிருப்பதாக சிலர் அஞ்சுகிறார்கள். அவர்கள் தமிழ் வரலாற்றாய்வாளர்களல்ல என்பதை அனைவரும் அறிவர். (தலைவர் பிரபாகரனின் தந்தையார் எல்லாளன் சமாதியருகே பணியாற்றிய காலத்தில் பிறந்தவரே பிரபாகரன் என்றும் சிங்களவர்களில் சிலர் நம்புகிறார்களென்றும் அறியக்கிடைக்கிறது) இதுபோலவே கற்சிலை மடுவிலுள்ள பண்டாரவன்னியனின் நினைவுத்தூபி, நல்லூரிலுள்ள சங்கிலியன் தோப்பு போன்ற சமாதிகளெல்லாம் ஈழத் தமிழினத்திற்குரிய வரலாற்றுத் தேவையைத் தேடுபவையாகும். அந்த வகையில் எழுச்சிபெற்று நவம்பர் 27ம் திகதி வரும் மாவீரர் தினமும் சில வேண்டுதல்களைக் கொண்டுள்ளது. எகிப்திய மக்கள் பாடுபட்டு உருவாக்கிய பிரமிட்டுக்கள் போன்றதே தமிழீழம் என்றால் அதை உருவாக்க தமிழீழ மக்கள் பெறவேண்டிய எழுச்சியைத் தர வருவதே மாவீரர் நாளாகும்.

✸



# TAMIL HEROES DAY 1998

Ever present in our hearts and minds is an awareness that so many of the gallant men and women are dying not only defending our homes, homeland and language, but also standing between the Tamil Eelam nation and annihilation. Once a year the Tamil people spread around the globe collectively honour the Tamil heroes.

As we approach Tamil Heroes Day 1998, our minds are filled mainly with two things:

One, is the awesomeness of deep sorrow and anguish that so many of our young people have been killed. The war - memorials in different parts of the world carry the inscription:

*"For your tomorrow, we gave our today"*

The heroes of Tamil Eelam have given their today so that the rest of us, our sons and daughters, grandchildren and theirs after them, may have a tomorrow.

The second feeling is one of great pride that our heroes were so dedicated in the love of Tamil Eelam that they gave their all to generations they will never see, know or love.

There are two pieces of wisdom I have learnt from the ancient peoples of Australia and New Zealand.

The Australian one is the epitaph on Pat Dodson's grand-fathers gravestone;

*"The Sun rises, wind blows, grass grows*
*The tide comes and goes,*
*No one can ever take your land"*

(Pat Dodson was Chairman of the Australian Reconciliation Commission)

The Maori saying was quoted recently by the first Maori Governor General of New Zealand, the Rt. Rev Sir Paul Reeves, at a Conference in Melbourne:

*"You lose land, language and manna,*
*And your life force would have gone out".*

These words of wisdom endorse the cause our heroes are fighting and dying for.

Let us honour the memory of our heroes, and re-dedicate ourselves to Tamil Eelam at this 'Ninaivu Malar'.

*- C. Jayaratnam Eliasir*

# மாவீரர் நாள்

கௌரவம் மிக்க நமது ஆண்களும் பெண்களும் இறப்பது, எமது வாழ்விடங்களை, தாயகத்தை, மொழியைப் பாதுகாப்பதற்காக மட்டுமல்ல, தமிழீழத் தேசத்தின் மீதான முழுமையான இன அழிப்பிற்கு எதிராகவும் நிற்கின்றார்கள் என்பதை எமது நெஞ்சம் அறியும். உலகம் பூராகவும் பரவி வாழும் தமிழ் மக்கள் வருடத்தில் ஒருமுறை இம் மாவீரர்களைக் கௌரவிப்பதற்காக ஒன்று திரள்கின்றனர்.

1998 மாவீரர் நாளை நாம் நெருங்கும் இவ்வேளையில், எமது நெஞ்சம் பிரதானமான இரண்டு விடயங்களால் நிரம்பியுள்ளன.

முதலாவதாக, ஏராளமான இளம் மக்கள் மரணித்துவிட்டனர் என்பது பற்றிய ஆழ்ந்த கவலையில் வேதனை கொண்டதாய் நெஞ்சம் நிரம்பியுள்ளது. உலகத்தின் வெவ்வேறு பகுதிகளில் உள்ள போர் நினைவுச் சின்னங்களில் பின்வரும் வார்த்தைகள் பொறிக்கப்பட்டுள்ளன.

***'உங்கள் நாளைக்காக எமது இன்றைய நாளை கொடுத்திருக்கின்றோம்'.***

தமிழீழ மாவீரர்கள் தமது இன்றைய நாளை எமக்காய் அர்ப்பணித்துள்ளனர். அவர்களின் இந்த அர்ப்பணிப்புகள் எமது புதல்வர்கள் மீதும், பேரக் குழந்தைகள் மீதும், இனிவரும் தலைமுறை மீதும், படர்ந்திருக்கும். அவை அவர்களின் நாளைக்கானதாய் இருக்கும்.

இரண்டாவதாக, எமது பெருமிதத்திற்குரிய மாவீரர்கள், வருங்கால சந்ததியினருக்காகவும், தம் நெஞ்சில் ஏந்திய தமிழீழத்திற்காகவும் தம்மை முழுமையாக அர்ப்பணித்துள்ளார்கள்.

அவுஸ்திரேலிய, நியூசிலாந்து தொல்குடிகளிடமிருந்து இரு அறிவுபூர்வமான விடயங்களை நான் அறிந்தேன். அவுஸ்திரேலியாவின் 'பற் டொட்சனின்' மூதாதையினரது சமாதிக் கற்களில் பின்வருமாறு பொறிக்கப்பட்டுள்ளது.

***'சூரியன் உதிக்கின்றான்***
***காற்று வீசுகின்றது***
***புற்கள் முளைக்கின்றன***
***அலைகள் வந்து வந்து திரும்புகின்றன***
***எமது நிலத்தை***
***எவராலும் அபகரிக்க முடியாது'***

('பற் டொட்சன் – முன்னாள் அவுஸ்திரேலிய மீள் ஒருமைப்பாட்டு ஆணைக்குழு தலைவர்)

நியூசிலாந்து மயோரியின் முதன்மை ஆளுனர், ஓய்வுபெற்ற வண. பிதா 'போல் றீவ்ஸ்' அவர்கள், மெல்பேர்னில் நடைபெற்ற மாநாடொன்றில், மயோரியின் பின்வரும் சொற்களை மேற்கோள் காட்டியிருந்தார்.

***'நீங்கள், நீரை, நிலத்தை, மொழியை இழந்தால்***
***உங்கள் வாழ்வின் பலம் இழக்கப்பட்டதாகும்'***

இவ் அறிவுபூர்வமான வார்த்தைகள், தங்கள் இலட்சியத்திற்காக போரிட்டு மடியும் எம் மாவீரர்களுக்கானது.

இம் மலர் மூலம் எம் மாவீரர்களுக்கு வீரவணக்கத்தை செலுத்துவதோடு, தமிழீழத்திற்கான புனிதப் பணியில் எம்மை மீள் அர்ப்பணிப்புச் செய்வோம்.

– தேசியத் தலைவரினால் மாமனிதர் விருதுபெற்ற எலியசர்

# 1700 ஆண்டுகால அடிமைத்தனத்தை உடைத்தெறிந்த மாவீரர்கள்

கல் தோன்றி மண் தோன்றா காலத்தே முன் தோன்றிய மூத்த குடி தமிழர்கள். அத்தகைய சிறப்புக்குரிய இனமான தமிழர்களுக்கு இன்று ஒரு நாடு இல்லை. இமயம் முதல் குமரி வரை ஆண்டவன் தமிழன். கடல் கடந்து சென்று கடாரம் கண்டான் தமிழன் என்று சொல்லிப் பெருமைப்பட்டுக் கொள்ள முடியுமே தவிர, இது எனது தாயகம் என்று மார் தட்டிக் கொள்ளும் மாண்பினை இழந்துவிட்டோம்.

சிந்து நதிக்கரை அகழ்வாராய்ச்சியில் நமது மூதாதையர் பல நூற்றாண்டுகளுக்கு முன்னரே நாகரிகம் மேலோங்கி வாழ்ந்தனர் என்பதற்கு ஆதாரங்கள் இருக்கின்றன. தமிழைப் பழித்ததற்காகப் படையெடுத்தான் சேரன் செங்குட்டுவன். கனகவிசயர் தலையில் கல்லை ஏற்றினான் என்றும் வரலாறுகள் தமிழர் பெருமையை பறைசாற்றுகின்றன. ஆனால் இன்று ......? உலகம் முழுதும் தனக்கென்று சொந்த நாடற்ற இனமாக மூன்றாந்தர குடிமக்களாக, அகதிகளாக, அடிமைகளாக வாழ்கிறோம். அடைக்கலம் தேடும் இனமாக வாழ்கிறோம்.

உலகின் ஆறு கண்டங்களில் ஒன்பது கோடி தமிழர்கள் வாழ்கிறோம். இத்தகைய எண்ணிக்கை இருந்தும் அரசியல் உரிமை இழந்த இனமாக வாழ்கிறோம். ஐந்து இலட்சத்துக்குக் குறைவான சனத்தொகை கொண்ட பல இனத்தவர்கள் சொந்த நாட்டுக்கு உரிமையுள்ளவர்களாக உள்ளனர். நாம் ஒன்பது கோடி இருந்து என்ன பயன்?

எந்த இனத்துக்கு ஒரு நாடு இல்லையோ, எந்த இனத்துக்கு அரசியல் உரிமை இல்லையோ, அந்த இனம் பிற இனத்தவரின் ஆளுமைக்கு ஆளாக நேரிடும். வளமாக வாழத் தலைப்பட்டாலோ, அரசியல் உரிமை கேட்டாலோ அடக்குமுறைக்கு உள்ளாக்கப்படுவர். இதைத்தான் இன்றைய தமிழ்மக்கள் உலகெங்கிலும் அனுபவித்து வருகின்றனர்.

முதலில் பர்மாவில் வளமாக வாழ்ந்த தமிழ் மக்கள் அடிபட்டார்கள். உடமைகளை இழந்தார்கள். அகதிகளாக வெளியேற்றப்பட்டார்கள். தாய்த் தமிழ்நாட்டிற்கு நுழைந்தபோது அகதிகள் என்று ஒதுக்கி வைக்கப்பட்டார்கள். பின்னர் இலங்கையில் அடைந்த கொடுமைகள் சொல்லி மாளாது. இவர்களும் தாய்த் தமிழ்நாட்டில் அகதிகளாகத்தான் அனுமதிக்கப்பட்டார்கள். பின்னர் பீஜீயில் தமிழர்கள் அடிபட்டார்கள். தொடர்ந்து கர்நாடகாவில்..... இப்படி எந்தெந்த நாடுகளில் தொடருமோ......?

தமிழைப் பழித்தபோது படையெடுத்தனர் தமிழ் வேந்தர். ஆனால் இன்று தமிழ் மக்கள் அடிபடுகிறார்களே — அவமானப்படுத்தப்படுகிறார்களே — தமிழ்ப் பெண்கள் கொடுமைக்கு உள்ளாகின்றனரே. இதனைத் தடுத்து நிறுத்தும் 'வக்கற்ற' இனமாகத் தமிழ் இனம் சிறுமைப் பட்டுக்கிடக்கின்றது. தமிழர்களே தேர்வு செய்த தமிழக அரசு எப்பொழுது வேண்டுமானாலும் கலைக்கப்படலாம் என்ற நிலையில் அரசியல் உரிமை இழந்த இனமாக தமிழகத்தில் வாழ்கிறோம்.

தமிழினத்திற்கு தனிநாடு வேண்டும். யார் வேண்டுமானாலும், எவர் வேண்டுமானாலும் தமிழன் மீது கை வைக்கலாம் எனும் நிலை மாற வேண்டுமானால் தமிழருக்கு தீங்கு நேருகின்ற போதெல்லாம் தட்டிக்கேட்கிற 'தனித் தமிழ்நாடு' உருவாக வேண்டும்.

1700 ஆண்டுகள் அடிமைப்பட்டு மான உணர்வில்லாமல் சொந்த நாடு வேண்டுமென்ற எண்ணமில்லாமல், ஒற்றுமையாக வாழ முடியாமல் சாதி மத வேறுபாடுகளால் பிரிந்து நின்று ஒருவரை ஒருவர் அழித்துக் கொள்ளும், தமிழ் மக்களுக்கு விடுதலை வேட்கை வெடித்துக் கிளம்ப வேண்டும். சுயமரியாதை மிக்க போர்க்குணம் கொள்ள வேண்டும்.



தன்னம்பிக்கை

**பாலசுப்பிரமணியம்**

தமிழனுக்கு தாய் நாடு தேவை. அந்த நாடு 'தமிழ் ஈழ'மாக அமையப் போகின்றது. அத்தகைய உணர்வுகளை கிளர்ந்தெழச் செய்யும் போராட்டம் தமிழ் ஈழத்திலே தொடங்கி வெற்றியின் விளிம்பை நோக்கிச் சென்று கொண்டிருக்கிறது. இந்தப் போராட்டத்திலே வெடித்துச் சிதறுகிற கண்ணி வெடிகள், பீரங்கித் தாக்குதல், துப்பாக்கிச் சூடு, விமானத் தாக்குதல், இராணுவத்தின் அடக்குமுறை இவற்றில் எல்லாம் சிக்குண்டு உயிர் நீத்த மாவீரர்களின் இரத்தத்தில்தான் தமிழர்களின் தனித்தமிழ் நாட்டுக்கு சிவப்புக் கம்பளம் விரிக்கப்படுகின்றது.

தமிழினத் தலைமகன் தளபதி பிரபாகரன் அவர்களின் தலைமையில் "தமிழ் ஈழ" வேட்கையை நெஞ்சிலே சுமந்து போர்க்களம் கண்ட இந்த மாவீரர்கள்தான் 1700 ஆண்ட அடிமைத்தனத்தின் தளைகளை உடைத்தெறியும் போராட்டத்தின் ஆணிவேர்கள். உங்கள் தியாகத்திற்கு ஈடு இணை கிடையாது. நீங்கள் இரத்தம் சிந்திய மண் "தமிழீழ"மாய் மலர்ந்தே தீரும்.

இந்த மாவீரர்களை தமிழ் மண்ணுக்கு ஈன்றெடுத்துக் கொடுத்த பெற்றோர்களின் கண்ணீருக்கு காணிக்கை "தமிழீழம்" மட்டுமே. அஞ்சா நெஞ்சம் கொண்ட அருமைப் புதல்வர்களை, மாவீரர்களை தமிழ் மண்ணுக்கு வழங்கிய அந்த இதயங்களின் மலர்ப் பாதங்களில் தலை வைத்து வணங்குகிறேன்.

தமிழினம் காக்க தமிழ் ஈழம் காண உயிர்கொடுத்த மாவீரர்களை நினைவுகூறும் இந்த "மாவீரர் தினம்" வரலாற்றுச் சிறப்புமிக்க நாள். மலரும் தமிழ் ஈழத்தில் மட்டும் உங்கள் பெயர்கள் உச்சரிக்கப்படப்போவதில்லை. உலகெங்கும் வாழும் தமிழ் மக்களின் நெஞ்சங்களிலும் நிலைத்து வாழ்வீர்கள். உறைந்துவிட்ட உங்கள் உதிரத்தில் மலரட்டும் தமிழ் ஈழம்.

★★



# சூரியன் செத்ததாய் எவன் சொன்னது?

கடல் அலையில் ஒதுங்கும்
சிற்பிக்குத் தாகம்
கழுத்தில் அலை பாயும்
சயனைட்டு குப்பிக்கும் கோபம்

வெடித்துச் சிதறும்
ஒவ்வொரு உயிரும்
மில்லர் நெருப்பின் மிச்சம்தான்

களத்தில் நிமிரும்
விழிகளெல்லாம்
கிட்டு கலந்த அலையின் சீற்றம்தான்

சீண்டிப் பார்த்தால்
தலைவனின் துவக்காகித்
தாக்குவார்கள்
தோழமை கொண்டாலோ
கிட்டுவின் கைத்தடியாகவும்
தாங்குவார்கள்!

மரணத்தை அழைத்து
மடியிலே அமர்த்தி
தன்னையே திலீபனாய்த்
தின்னவும் கொடுப்பார்கள்

தன் சிதைக்குத்
தானே தீ மூட்டி
தன் உயிரையே
மண்ணுக்குள்ளும்
விதைப்பார்கள்

வெடிக்கின்ற
கண்ணி வெடிகளெல்லாம்
முகவரியாகி வீழ்வார்கள்

எதிரியின் கோட்டையில்
புலிக்கொடி சிவப்பாகி
எழுந்து சிரிப்பார்கள்

குறிபார்க்கும் துவக்கினில்
விழிகளாய் மறைவார்கள்
காயம்பட்ட தோழனுள்
சுவாசமாய் நுழைவார்கள்

விடுதலை கானத்தில்
சொற்களாய் உயிர்ப்பார்கள்
பிஞ்சுகள் நெஞ்சினில்
தாலாட்டாய் கலப்பார்கள்

வவுனியா காட்டினில்
இலைகளாய் நிமிர்வார்கள்!
பதுங்கு குழிகளில்
கருப்பையாய்
வீரனைச் சுமப்பார்கள்

மரணம் மாவீரர்களுக்கில்லை......
சூரியன் செத்ததாய்
எவன் சொன்னது?

- **வவுனியன்**
தமிழ்நாடு



தாலாட்டு

கறுத்து உயரும்
பனைகளில்
உங்கள்
கரங்கள்

பின்னணியில்
அரக்குச் சிவப்பில் எழும்
சூரியனில்
உங்கள்
முகம்

வேம்பின்
தலை சிலுப்பும்
காற்றில்
உங்கள்
மூச்சு

நுரைத்துப் புரளும்
ஓயாத
அலைகளில்
உங்கள்
வெற்றி



போர்களத்தில்
மண்ணுக்கடியிலும்
குறிபார்க்கும்
ஆயுதங்களாய்
நீங்கள்

மரணத்தின் மண்குடத்தை
கர்ப்பத்தின்
நீர்குடமாக்கி
மறுபடியும்
மறுபடியும்
பிறக்கும்
எங்கள்
மாவீரர்களே!

# நாள்

இது
உங்களுக்கான
அஞ்சலி நாள் அன்று
நமக்கான
தாலாட்டு நாள்!

- அறிவுமதி (தமிழ்நாடு)

# புதையல் காவியம்

**பச்சியப்பன்** (தமிழ்நாடு)

அதோ....
பறவையின் மொழி கொண்டு
தேசிய கீதம் பாட
உதடு குவித்து நிற்கிறது
காற்று

கண்களில் புதுவெளிச்சம் தேக்கி
இமை திறக்கும் படபடப்பில்
தவித்துக் கிடக்கிறது
கிழக்கு

விழுப்புண் பட்ட
பூமியின் தோள்களுக்காய்
சூரியப் பதக்கத்தை
சுத்திகரித்துக் கொண்டிருக்கிறது
அண்டம்

ஈழக் கிளைதனில் குலுங்கும்
புலிக்கொடிப் பூவின்
மகரந்தம் சுமந்து
சிறகு விரிக்கிறது
பட்டாம்பூச்சி

காலம் தொகுத்துக்
கொண்டிருக்கிறது
நெடுநாளைக்குப் பிறகு
ஒரு
புறநானூறு

திசையின் திண்ணையில்
அமர்ந்தபடி
நட்சத்திரப் பாட்டிகள்
சொல்லிக் கொண்டிருக்கிறார்கள்
வேர்களின் கதையை
புதையலின் கதையை
விடுதலை
ஊற்றுக் கண் கதையை

அந்த விளைச்சலுக்காய்
இரத்தம் பாய்ச்சியவர்களை,
வீசும் காற்றாய்
மூச்சுத் தந்தவர்களை,
உலகின் கரைகளில்
சொல்லிக் கொண்டிருக்கின்றன
ஓயாத அலைகள்.

# அலையில் எழும் மலர்கள்

கரைதொட்டு நுரை பரப்பிப் பாயும் அந்த வாய்க்கால் கரையில் வான் முட்ட முயலும் அந்த மருத மரம் வேர் பரப்பி நீர் இழைந்து சுகிக்கிறது! வளைந்து நெளிந்து மேலெழுந்து ஆழச் செல்லும் வேர்கள், அங்குமிங்கும் நீரில் நனைய வளைந்து முட்டி மோதிச் சிற்றலை எழுப்பி சுழிக்கும் நீரின் அசைவுகள்.

அந்த வேர்கள் முன்பெல்லாம் மண்ணுக்குக் கீழிருந்து மரம் நிலைக்க உறுதி கொடுத்து நிலம் துளைத்திருக்கும். நீர் அரித்து மெல்ல மெல்ல மண் கரைய இன்று அவை மேலெழுந்து நீருடன் கொஞ்சி விளையாடிப் புன்னகைக்கின்றன.

அந்த வேர்கள்.

பெருமையுடன் ஏன் தலை நிமிர்கின்றன; வரலாற்று நாயகர்களின் பாதங்கள் பட்டதனால் பொன்னாகிப் போய்விட்ட அதன் பட்டைகள் நீரில் தெறித்த சூரிய ஒளியில் மின்னிச் சிரிக்கின்றன.

ஆம்.

அவை வீர வரலாறு எழுதி வைத்துவிட்டு வித்தாகிப் போய்விட்ட அம் மாவீரர்களுடன் உறவாடியவை

காவலரணின் கண்காணிப்பு பகுதியூடாக என் கண்கள் அவ் வேர்களைத் தடவுகின்றன.

வேர்கள்.... வேர்கள்.... வேர்கள்....

மதி வேரில் ஏறி நின்று நீரில் பாயத் தயாராகிறான்....

என் மனது எண்ணங்களை 'ஸ்லோமோசனில்' அசை போடுகிறது.

மதி காற்றில் எழ கைகள் இறக்கைகளாகி மெல்ல அசைய கால்கள் மீனின் வாலாக வெளியைத் துழாவ, தலைகீழாகக் குதித்து, அந்தரத்தில் ஒரு கரணம் அடித்து உச்சந்தலை நீரில் குத்திவிழ மதி மெல்ல மெல்ல நீரில் அமிழ்கிறான்.


நீர் துளித்துளியாக எழுந்து விண்ணில் பரவி–

நீர்த்துளிகளா அவை?

இல்லை.... இல்லை.... மலர்கள்.... மலர்கள்....

களமாடி எதிரிகளைக் கிலி கொண்டு ஓட வைத்து, எங்கிருந்தோ பாய்ந்து வந்த எதிரியின் குண்டினால், தன்னை வரலாற்றில் பொறித்துவிட்டு எம்மைப் பிரிந்த மதி–

செங்கொடி போர்த்திய அந்தப் பேழை மெல்ல மெல்ல புனித விதை குழியுள் இறங்குகின்றது. ஒப்பற்ற ஒரு, தாயக மண்ணின் புத்திரனுடன் மண்ணுக்குள் சேரப்போகும்



பெருமை அப் பேழைக்கு! கண்ணீர் பெருக சுற்றி வந்து மூன்று பிடி மண்ணள்ளிப் போட்டு கதறும் உறவுகள். அருகில் நின்று சமராடிக் காவியம் படைத்த தோழனின் முகத்தைக் கடைசியாகப் பார்க்கும் உணர்வில் நெஞ்சு துடிக்கும் சக போராளிகள்.

மதி

மரியாதை வேட்டுகளை வாங்கிய பெருமையில் மண்ணுக்குள் விதையாக புதைகிறான். மலர்கள்; மலர்கள்; மலையாகத் தூவப்படும் மலர்கள்!

மலர்களாக எழுந்து, கதிரவன் ஒளியில் பிரதிபலித்து, ஏழு நிறங்கள் மின்னல் வெட்டும் நேரத்தில் அள்ளிச் சிதறிவிட்ட அந் நீர்த்துளிகளை அப்படியே நிலையாக்கி விட்டு மாவீரர் துயிலும் இல்லத்திற்குச் சில மாதங்களை விழுங்கிவிட்டு ஓடிச் சென்ற மனது, மீண்டும் நுரை பரப்பும் நீரோட்டத்தில் தவழுகின்றது.

நீரினுள் தலை அமிழ்ந்த அந்த இடத்தில் நீர் ஒரு முறை பள்ளமொன்றை ஏற்படுத்தி விட்டு, மீண்டும் சமநிலைக்கு வர–

ஏற்கனவே நீரினுள் அமிழ்ந்திருந்த ஐந்து தலைகள் மேலெழ அதில் என் முகமும்–

எல்லாத் தலைகளும் இப்போ நீரின் மேல்!

மதி, சுரேஷ், கண்ணன், ரவி, சுதா நான்....

ஆறு முகங்கள்

ஆமாம்!

ஆறுமுகங்கள்!

முருகனுக்கும் ஆறுமுகங்கள் எங்களுக்கும் ஆறுமுகங்கள் வேங்கையெடுத்து, வீரம் வெளிக்காட்டி சூரனைப் பணிய வைத்த அந்த ஆறுமுகங்கள்!

வேல் ஒருமுறை கண்ணில் மின்னுகிறது!

நீண்ட அடிப்பாகம், அகன்ற தலை கூர்மையான நுனி... காற்றைக் கிழித்துச் சென்று சூரபதுமனின் தலையைப் பிளக்கும் ஆற்றல்...

தாயக விடுதலை உணர்வு வேலின் அடிப்பாகமாக நீண்டு, தலைப்பாகமாக அகன்று, நுனிப் பாகமாகிக் கூர்ந்து எதிரியைத் தேடித் திரிந்து சின்னாபின்னப்படுத்தி—

சேவற் கொடியும், மயில் வாகனமும் கண்களில் தெரிகின்றன... காலம் செல்லலாம். ஆனால் காலத்தை விழுங்கி வெற்றியை விரைவுபடுத்தும் இம் மாவீர மணிகள்—

நீரில் அமிழ்ந்து எழுந்து ஒன்றையொன்று கட்டிப்பிடித்து நீரில் அமுக்கி, உதவி விடுவித்து எழுந்து விளையாடும் அந்த ஆறு முகங்கள்—

கோலிய கைகள் நீரின் மேற் பரப்பை உதைக்கத் தண்ணீர் துளிகளை கூரிய அம்பாகச் சிறியெழுந்து, சுள்ளென்று தோளில் குத்த, சிரிப்பு; கும்மாளம்; கேலி....

ஆறுமுகங்களும் நீரில் ஓடியலைகின்றன. என்றோ மண்ணுக்காகத் தம்மை அர்ப்பணிக்கப் போகும் அம் மகத்தான ஆறு முகங்களின் ஸ்பரிசத்தில் நீர் துள்ளிக் குதித்துக் களியாட்டம் போடுகின்றது.

அந்த ஆறு முகங்கள்—

ஒரே ஊரில் பிறந்து, ஒரே ஊரில் வளர்ந்து, ஒரே பாடசாலையில் பயின்று, ஒரே வாய்க்காலில் விளையாடி, ஒரே மண்ணில் கிட்டிப் புள்ளடித்து—

என்றுமே ஒன்றாய்... அறுவரும் ஒருவராய்..

அந்த ஆறுமுகங்களும் ஒருநாள் அந்த ஊரில் காணாமல் போயின.

ஆம்!

ஒன்றாய்த் திரிந்த அந்த ஆறுமுகங்களும் ஒரே தலைவனின் பாசறையில் பயிற்சிபெறச் சென்றுவிட்டன.

இன்று

ஐந்து முகங்களும் முன்னேறி வரும் எதிரியை முறியடித்துத் துரத்தும் பணியில் மலர்களாகி... மலர்களாகி மனமெல்லாம் நிறைந்த மலர்களாகி...

நான்... நான் மட்டும்.... காவலரண் சாளரத்தினூடாக, ஆறு முகங்களும் ஒரு காலத்தில் ஒன்றாய்த் தவழ்ந்த அந்த நீர்ப் பரப்பில் கண்கள் நிலைகுத்தி நிற்க.....

என் கண்கள் கலங்குகின்றனவா....

இல்லை..கலங்கவில்லை.... கலங்கக் கூடாது...

இப்போ

ஆறு முகங்களும் ஒருமுகமாகி நானாகி சேவலையும் மயிலையும் தேடி மாமரமாயும், மறைந்துவரும் சூரனை எதிர்கொள்ள காவல் நிற்கிறேன்!

ஆம்!

ஆறு முகங்கள் ஒரு முகமாகி அதுவே நானாகி

ஓ அவர்கள்... மாவீரர்கள்.... இழக்கப்பட்டவர்கள்.... அல்ல... என்னுள் இறுக்கப்பட்டவர்கள்.

ஏன்... எங்கோ படித்த கவிதா வரிகள்... என்னுள் இப்போ எழுகின்றன. ஏன்... ஏன் உல்லாச வாழ்வு, உறுதியான ஆசைகள் எல்லாவற்றையும் எடுத்தெறிந்துவிட்டு, தாயக மண்ணை மட்டும் காதலித்த இந்த மாவீரர்கள் இங்கே கவிதைக்குள் புகுந்த கதை சொல்கிறார்களா? ஓ கவிதை... அவர்களே கவிதை.... கவிதையே அவர்கள்....

ஆம்... இவ் வீரர்களின் பின்னால் நான்... என்னுள் அவர்கள் அவர்களுள் நீங்கள்... அணிவகுத்து நிற்கிறோம்.

நாங்கள் ஏறிக் குதித்த இந்த மருதமர வேரில் எமக்குப் பிறகும் எத்தனையோ பேர் ஏறிக் குதித்தனர். அள்ளி இறைத்த நீர்த் திவலைகள் அவர்களையும் அரவணைத்தன.

மீண்டும் மீண்டும்

மலர்கள்... மலர்கள்...

எமது மண்ணில் விடுதலை மலரும்வரை மலர்கள்... மலர்கள்.... மலர்கள்....

அம் மாவீரர்களின் கரங்கள் ஏந்திய சுடுகலன்களை மீண்டும் ஏந்த மலர்கள்.... மலர்கள்.... மலர்கள்...

தமிழீழம் மலரும் வரை!

★

**நா. யோகேந்திரநாதன்**
—தமிழீழம்

## உயர்ந்த சாவு!

— எஸ். பொ.

உயர்ந்தவன் நீ; உயரத்தால் மட்டுமல்ல
உள்ளத்தால்; உள்ளபடி அன்பால்; அறிவால்!
உயர்ந்தவன் நீ; உயரத்தால் மட்டுமல்ல
உருவாகும் எண்ணத்தால்; ஏந்தும் கருத்தால்!
உயர்ந்தவன் நீ; உயரத்தால் மட்டுமல்ல
உன்னாட்டின் விடுதலையில் உனது பங்கால்!
உயர்ந்தவனும் நீயேதான்; உனது மரணம்
உன்னிடத்தில் வெட்கியதால் உயர்ந்தே
போனாய்!

ஓரினத்தின் விடுதலைக்குச் சாவு தேவை
ஒவ்வொன்றும் நூறாகி இலட்சமாகும்
யாரெவனும் தோள்மீது சாவைச் சுமக்க
யமனுக்கும் அவன் மீது அச்சம் தோன்றும்,
நூறுமுறை சாக்களத்தில் ஊஞ்சலாடி
நெடிய தமிழ் இனத்திற்காய் களத்தில் நின்று
காறியுமிழ் நீரை உன் மரணம் மீது
கனன்றவிழி சிவப்பேற துப்பிவிட்டாய்!

# ஓ! மாவீரர்களே!



சாவு
என்னை எதிர்பார்த்திருக்கிறது
என்றான்
கோழை
சாவை
நான் எதிர்பார்த்திருக்கிறேன்
என்றான்
வீரன்.
ஓ! மாவீரர்களே!
நீங்கள் இரண்டாவது வகை.

மிதிபட்டுச் சாகிறேன்
புலம்பினான்
கோழை
போராடிச் சாகிறேன்
உறுமினான்
வீரன்.
ஓ! மாவீரர்களே!
நீங்கள்
இரண்டாவது வகை.

போரில்
என் மக்கள்
கொல்லப்படுகிறார்கள்
ஓலமிட்டான்
கோழை.
போரில்
என் மக்களை
கொன்றவர்கள்
கொல்லப்படுகிறார்கள்
எக்களித்தான்
வீரன்.
ஓ! மாவீரர்களே!
நீங்கள்
இரண்டாவது வகை.

காலம்
தமிழீழத்தை
உருவாக்கும்
காத்திருந்தான்
கோழை.
காலத்தை
நான்
உருவாக்குவேன்
களமாடினான்
வீரன்.
ஓ! மாவீரர்களே!
நீங்கள்
இரண்டாவது வகை.

உயிர்வாழ
விரும்புகிறேன்
முனகினான்
கோழை.
மானத்தோடு
உயிர்வாழ
விரும்புகிறேன்.
முழங்கினான்
வீரன்.
ஓ! மாவீரர்களே!
நீங்கள்
இரண்டாவது வகை.

நெஞ்சின்
நெருப்போடும்
விடிவின்
நினைவோடும்
நிமிர்வோடும்....
ஓ! மாவீரர்களே!
வரலாற்றில்
நீங்கள்
முதல் இடத்தில்.

- உணர்ச்சிக் கவிஞர்
காசி ஆனந்தன்

# தமிழீழ மாவீரர் நாள்



தேசத்தின் விடுதலை ஒன்றே உயிர்மூச் சாகக் கொண்டு உயிருள்ள வரை தமது கொள்கையிலி ருந்து கிஞ்சிற்றும் வழுவாது கடைப்பிடித்த தியாகிகளை நினைவு கூரும் நாள். ஒரு கைத்துப்பாக்கியுடன் ஆரம் பித்த விடுதலைப் போராட் டத்தை "ஆட்லறி" வரை கட்டியெழுப்பிய சிற்பிகளை நினைவு கூரும் நாள்.

பிரளயமே நிகழட்டும் – எரிமலையே வெடிக்கட்டும் இவர்களின் இலட்சியப் பய ணத்தை இவையெவையும் தடுத்ததில்லை. தமது குறிக் கோளை அடைய அவர்கள் சாவையும் சுமந்து சென்றார் கள். எதிரியின் ஆட்பலமும், ஆயுதபலமும் இவர்களுக்கு பொருட்டேயல்ல. எதிரி களை நடுநடுங்க வைப்பது இவர்களுக்கு கைவந்த கலை. எம் தமிழீழ மண்ணை ஆக்கிரமிக்க முயன்ற எவரையும் இவர்கள் நிம்மதியாக இருக்கவிட்டதில்லை.

இவர்கள் தமது நாட்டின் மீதும் மக்கள் மீதும் மாறாத பற்றுக் கொண்டவர்கள். அந்நிய இனவெறியரால் தமது மக்கள் படும் துன்பங்களை – அழிவுகளைக் கண்டு மனம் பொறுக்காது துயர் துடைக்கப் புறப்பட்டவர்கள். தமது உயிருள்ள வரை போராடி மக்களைக் காத்தவர்கள்.

மழையும் இடியும், புயலும், கடலும், கானகமும் இவர்களுக்குத் தோழர்கள். இவர்களின் இலட்சியப் பயணத்தில் அவை கைகோர்த்தே சென்றன. இன்று அவர்களை நினைவு கூர்த்து விழிசிந்தி நின்கின்றன.

தமது தலைவன் குறித்தும், தமது தோழர் கள் குறித்தும், தமது மக்கள் குறித்தும் அவர்கள் பெருமிதமும் பூரண நம்பிக்கை யும் கொண்டவர்கள்.

தாயக விடிவு குறித்த தளராத நம்பிக் கையுடன் களம் புகுந்து சமரிட்டார்கள்.

"தமிழீழம்" என்பதே அவர்க ளின் தாரக மந்திரமாயிற்று.

தமிழின விடுதலை ஒன்றே அவர்களின் உயிர் மூச்சா யிற்று. இனவிடுதலை ஒன்றே அவர்களின் கனவாயிற்று.

அவர்களின் இலட்சியக் கனவை நனவாக்க தலைவ னும் ஆயிரமாயிரம் வேங்கை களும் இலட்சோப இலட்சம் தமிழ் மக்களும் அணிவகுத் துச் சென்று கொண்டிருக் கின்றனர். தமிழீழம் மலர்வ தும் மாவீரர் கனவு பலிப்ப தும் நிச்சயம்.

எழுச்சிகொண்ட வேங் கைகள் – இலக்கினை நோக் கிய பாதையில் நகர்வதற்கு மாவீரர்களே ஒளி தருகின்ற னர்.

நினைவுகளில் உறுதியும் – வேகமும் – எம் மாவீரரின் குருதி தந்த சொத்துக்களாய் இருக்க புலிகளின் இலட்சியம் ஈடேறும்.

அடிமை விலங்குகள் உடைத்து எறியப் பட்டு – சுதந்திர பூமியில் மனமெலாம் சுதந் திரம் வீச, மாவீரர்களின் நினைவுகள் எங் கள் உள்ளங்களில் கொலு வீற்றிருக்கும்.

அருகிலிருந்து கதைகள் பல பேசி, உணர் வோடும் உயிரோடும் இரண்டறக் கலந்த அந்த இனியவர்கள் நினைவில் நெஞ்சுகள் யாவும் நெக்குருகி நிற்கும்.

***

# நிலையாக எம் நெஞ்சில்

ஆகா....
அண்ணாந்து பார்
அங்கொன்றும்
இங்கொன்றுமாய்
வானத்தில்.....
கண் சிமிட்டும் நட்சத்திரங்கள்
அவை.. ஒவ் வொன்றும்...
நம்மிடை வாழ்ந்த
மாவீரர் முகங்கள்!!

திலீபனும் மில்லரும்
போர்க்கும் விக்டரும்
இப்படித் தொடங்கி...
இன்று பலவாய்....
பல்கிப் பெருகி...

வானமே முட்டிப் பொங்கி வழியுது....
மாவீரர் முகங்களை
நட்சத்திரங்கள்
கொண்டு மின்னுது...!

இன்று வருமோ
நாளை வருமோ - சாவு
என்று வந்து எம்மைக்
கொண்டு போமோ
என்றில்லாமல்
நன்று; வருக சாவே
என்று கைகுலுக்கி

நலம் விசாரித்து
சாவுடன் கைகோர்த்து
சந்தோஷமாய்ப் போவார்கள்
இந்த மாவீரர்கள்!

கொன்று குவித்து
எதிரிப் படையினரை
வென்று வாகை சூடி
சாவினும் சரித்திரம் படைக்கும்
இந்தக் - காவிய நாயகரைக்
கண்டு; மரணம்
மண்டியிட்டு அழுமோ?

இவர்களின் சாவுகள்- வெறும்
சம்பவங்கள் அல்ல
வீர வரலாற்றின் சரித்திரங்கள்
இவர்கள் வெறும் மனிதரல்லர்
மரணிக்கும் தெய்வங்கள்!
இவர்களின் வாழ்க்கை எழுத
வார்த்தைகள் இல்லை- ஏனெனில்
அவை வெறும் வாழ்க்கை அல்ல
வரலாற்றுக் காவியங்கள்

இவர்களைப் புதைப்பதில்லை
விதைப்பதால்
புதிதாய் முளைவிட்டுக்
கிளம்பும் அதிசயங்கள்
கல்லறைகள் கண்ணீர் வடிக்கும்

இவர்களின்
கதைகளைக் கேட்டு
காற்றும் மெல்ல விசும்பும்

புதை குழிகள் புறநானூறு பேசும்
போர்க் காவியங்களை
புதிதாய் எழுதும்
மண்ணின் துகள்கள் எல்லாம்- இந்த
மைந்தர் புகழ் சுமக்கும்
மாவீரர் இனம் ஒன்றே
உலகம் மறையும் வரை இருக்கும்

தியாகிகளின் தீபம் ஒன்றே
உயிர்த்தீ கொண்டு எரியும்
இந்த நாயகர்களின்
நினைவு நன்றே- என்றும்
மனதில் உயிர்த்துக் கொண்டிருக்கும்

- **தமிழினி** (அமெரிக்கா)



# நெடுநாள் வாடை

நாராய்.... நாராய்....
செங்கால் நாராய்....
உறை இடா கத்தியின்
கூரினையொத்த
நீள் நா நாராய்....


நீயும் உன் துணையும்
வடதிசைக் கடலேகி
தென்திசை நோக்கி
பயணிப்பீராயின்
கழுகுகள் வட்டமிடும்
ஊரைச் சேர்ந்த
எம் மக்களைக் காண்பீர்

துப்பாக்கி ரவைகள்
துளைத்த மரக்கிளையில்
தூங்காமல் தங்கி
சிறகை விரித்தால்
கடல் சூழ் அவ் வூரை
காண்பது எளிது

விண்ணேகும் உன் பார்வையில்
மண் சுமக்கும் உடல்களில்
காயம் சுமந்த முலைகள்
பெண் என்றும்
கனல் சுமந்த கண்கள்
ஆண் என்றும்
இனம் பிரித்துக் காண்பாய்

கடைசியாய்
ஒப்பாரிச் சத்தத்தில்
தாலாட்டுக் கேட்கும்
குழந்தைகளிடத்து
காதுகளைக் கொடு....
சின்னஞ்சிறு உதடசைத்து
அவர்கள் சொல்வார்கள்...

வரலாற்றின் புதைகுழியில்
மனிதர்களைப் புதைக்கலாம்
மாவீரர்களை அல்ல!



- நா. முத்துக்குமார் (தமிழ்நாடு)

# விழிவழி இதயம் வழிந்தோடும் பொழுது



கார்த்திகை மாதம் கார்மேகம் மட்டுமல்ல எங்கள் இதயங்களும் கண்கள் வழி கசிந்துருகும். மனங்களில் எங்கள் பிள்ளைகள் முகங்கள் மலர இதயம் விம்மும். அவரின் நினைவில் கிளறும் உணர்வுச் சுடரில் அவர்க்குச் சுடரேற்றுவோம். அப்பிளம்புச் சோதியில் தெரியும் எம் நெடும் பயணத்தின் நேர்வழித் தடம். புலரும் பொழுதினைச் சமைக்கப் பதியும் எம் பாதங்கள் அத் தடத்திலே.

ஆம்! நவம்பர் 27. எங்களின் மண்ணிலே நாங்கள் நிமிர்ந்து நடந்திடவும், 'ஏய்' என்றெமை அன்னியர் அதட்டுவதையும் அகற்றிக் கீழ்த்திசை வானின் விடியலைப் படைக்கத் தங்களைத் தந்த பிள்ளைகள் உணர்வை மனதில் நிறைத்துத் தீப்பிளம்பென நாங்கள் சுடரும் நாள்.

அன்றைய மாலை வழமையானதாக இருப்பதில்லை. எம் பிள்ளைகள் துயிலும் இல்லங்களே அன்றைய மையம், ஆலயங்கள், தாய், தந்தையர், சகோதரர், உறவினர், நண்பர், தோழர், தோழிகள் என்று துயிலும் இல்ல வீதிகளை நிறைத்து நாம் செல்வோம். கைகளில் மாலை, மலர், ஊதுபத்தி, கற்பூரம் இவற்றுடன் மனம் நிறைந்து வழியும் உணர்வுப்பெருக்கு எல்லோரின் முகங்களும் வழமையைவிடவும் வேறாய்; அகத்தினுள் உறங்கிய விடுதலைத் தீ சுடர எங்கள் பிள்ளைகள் நினைவு, உணர்வுள் தகிக்க விரைவோம்; அவர் கல்லறைக்கு; அவருடன் கதைக்க; ஆம். தம் இறுதி மூச்சு வரையும் நேசித்து இறுதித் துளி இரத்தத்தையும் சிந்தி இறுதி முத்தமிட்ட மண்ணில் ஆழ வேரோடி நிற்கும் அவரைத் துயிலெழுப்பி அவர்களின் உணர்வை எம்முள் நிரப்பி மீளும் உன்னத பொழுதுக்காய்.

வரிசை வரிசையாய் போருக்கு அணி வகுத்து தாம் முன்பு (களத்தில்) நின்றது போலவே உறங்கிக் கிடக்கின்றனர் எம் கண்மணிகள் கல்லறைகளாய்; நடுகற்களாய் மாலைகள் மலர்களுடன் எங்கள் கண்ணீர்ப் பூக்களும் அவர் பாதத்தில் பரவ துயிலும் இல்லத்தை வியாபிக்கும் ஓர் உன்னத உணர்வு.

6–மணி 05 நிமிடம் காணும் இடமெங்கும் பற்றும் சுடர்கள். அவை சுடர்களா? இல்லை. சுடர்ந்த எம் பிள்ளைகள் முகங்கள். சுடரிலே அவரைக் கண்டு கதறும் எம் உள்ளம், வாய்கள், செவிவழி புகுந்து இதயத்தைக் கரைத்த பாடலை இசைக்கும்.

*தாயகக் கனவுடன்*
*சாவினைத் தழுவிய*
*சந்தணப் பேழைகளே...*
*எங்கே எங்கே ஒருதரம் விழிகளை*
*இங்கே திறவுங்கள்*
*ஒரு தரம் உங்களின்*
*திருமுகம் காட்டியே*
*மறுபடி உறங்குங்கள்....*

விழி வழியே உருகி வழியும் இதயம்; மூச்சுக் காற்றுடன் கலந்து எம்முள் பரவும் எம் பிள்ளைகள்.

மீளவும் மீளவும் நவம்பர் 27–ல் எங்கள் மண் புடமிடப்படுகிறது. எங்கள் பிள்ளைகள் துயிலெழுந்து எம்மைச் சேர்வர். நாம் அவர் உணர்வுடன் அவர் தடத்தில் அவர் கனவினைச் சுமந்து இது விடியும் எம் மண்ணிலும் தொடரும். ஏனெனில் துயிலும் இல்லங்களில் உறங்குபவரே எம் மண்ணின் அடிக்கற்கள்.

**சிந்துஜன்**
தமிழீழம்

# பூகம்பமாகிய பூக்கள்

- மீரா

குண்டணைத்து
குறியைத் தகர்த்து
கொடு விஷம் சுவைத்து
மண் நினைத்து
மரணத்தை மணந்து
காற்றில், மண்ணில்
காவியமாகிய
ஆயுத உயிர்கள்
மண் விடிந்து செழிக்க
உரமான உன்னதங்கள்

சூரியக் குழந்தைகள்
சுடர்விடும் தேசத்தில்
வேலியின் பின்னால்
வெளிச்சம் பரவ
பூகம்பமாகிய
பூக்கள் வரிசையில்
மாலதி - பூபதி
அங்கையற்கண்ணிகள்
பெயரில்லாப் பெண்கள்
போர் வடிவம்
புதுப்பிக்கும்



ஓயாத அலைவீசும்
ஓர்மப் போராட்டம்

காலத்தின் கைப்பிடித்து
காற்றில் நடப்பவர்கள்
தீயின் நாக்குகளை
தீண்டிச் சுவைப்பவர்
காட்டாற்று வெள்ளத்தில்
களமாடும் காவியர்
புயலில் சிலைவடிக்கும்
கரும்புலிச் சிற்பிகள்

தலைவனின் காலத்தில்
தமிழினம் உயிர்பெற
விடிவான(த்து) வெள்ளியாய்
உயிர்ப்பார் மாவீரர்
புதிதன்றோ புதுமையன்றோ
போராட்ட வரலாற்றில்
விடியலின் திசையெல்லாம்
வெற்றிச் சிதறல்களாய்
யுகத்தின் முகத்தில்
ஒளிர்பவர் மாவீரர்.

# மாவீரர் பாதம் போற்றி!



ஆழியிற் துரும்பாகி
அவனியில் அடிமையாகி
சோர்ந்திட்ட தமிழன் தன்னை
விழித்தெழ வைத்து நின்று
எழுச்சிகொள் வீரத்தை ஊட்டி
விடுதலைத் தீ வளர்த்து
வேங்கையாய் உருவெடுத்த — வீரன்
எம் தலைவன் காட்டும்
பாதையில் சுவடு பதித்து
தம் ஆருயிர் உடல் துறந்து
இளமையின் கனவழித்து
பகைப்பூதத்தைச் சிதைத்தொடுக்கி
சென்றவர்.......
எங்கள் மண்ணதின் மைந்தர்
மாவீரர் நாமம் போற்றி
பாதத்திற் சிரம் தாழ்த்தி
வணங்குகின்றோம்!
அகிலமே அஞ்சுகின்ற
சாவென்ற பயத்தை வென்று
வீரராய் நிமிர்ந்து நின்று
குருதிச் சேற்றிலே உடல் சிதறச்
சென்றவர்— வீரர்—
பாதத்திற் சிரம் தாழ்த்தி
வணங்குகின்றோம் போற்றி! போற்றி!

உயிரினும் மேலாம்
ஈழச் சுதந்திர வாழ்வதனை
வதங்கிடும் மக்கள்
வாசலிற் பூத்திடவே
கொடுமை செய் வல்லரக்கர்
சூரர்கள்—பேய்கள் ஒத்த
தீமையின் தடை உடைத்து
வரலாற்றிற் கண்டிடாத
உயர் ஈகத்திற்
சிகரம் வைத்தீர்—
வீரர் நீர் போற்றி! போற்றி!

கடலிடை கரைந்த வீரர்
நாட்டினில் மடிந்த வீரர்
கரந்துறை வழியிலே சென்று
எதிர்ப்பகை வந்தவேளை
குப்பியை வாயில் வைத்து
குண்டினை இறுகணைத்து
காற்றுடன் கலந்து நின்று
காதோரம் சேதி சொல்வீர்
எம்முள் காவியமானீரே


தந்தை தாய் பாசமென்ற
பந்தங்கள் நேசம் தன்னை
மனப் பரப்புள்ளே மூடிவைத்து
தேசத்தின் விடிவை எண்ணி— எம்
சீரிய தலைவன் சொல்லை
இதயத்தின் அறை நிறைத்து
மக்கள் வாழ்வையே நோக்காய் ஏற்று
உயிர்ப் பூவையே ஊதிச் சென்று
தேச ஆன்மாவைக் காத்து நின்றீர்!

மனிதத்தின் உண்மையே நீர்தாம்!
வாழ்க்கையின் அர்த்தமும் நீர்தாம்!
இங்கு அகதியாய் அல்லல்படும்— நம்
அடியாரின் நெஞ்சில் என்றும்
அமரராய் வாழ்ந்து எம்மைச்
சூழ்ந்திடும் துயர் களைய
மீண்டும் நீர் பிறப்பெடுப்பீர்
வீர சுவாமிகளே போற்றி! போற்றி!

செம்பியன் அன்ரன்றிச்
இத்தாலி

# மாவீரர்கள்

- செல்வி. கா. அனுசியா -
தமிழீழம்



பெற்ற அன்னையை நேசித்து
பிறந்த மண்ணையும் பூசித்து
பாரினில் தன்மானமே பெரிதென்று
படுகளம் தன்னில்
இன்னுயிர் தந்தவரே
மாவீரர்கள்

மண் மீதில் வாழ்வதெனில்
மானமுடன் வாழ்வதென்று
மண் மீட்கும் போர்தன்னில்
மானமுடன் களமாடி
இன்னுயிர் தந்தவரே
மாவீரர்கள்

மாற்றானின் அடிமைகளாகி
மாற்றானிடம் தோற்றவர்களாகி
மயங்கிடும் எம்மை மீட்டு
மயக்கமது போக்கிட தம்முயிர் தந்தவரே
மாவீரர்கள்

பெற்றவளின் பெண்மையினைக் காக்க
பெண்ணினத்தின் சிறப்பினைக் காக்க
பேய்க் கூட்டமதை நாட்டைவிட்டோம்
பேதைகள் அல்ல பெண்களெனத்
தம்முயிர் தந்தவர்களே
மாவீரர்கள்

கரும்புலியாகி எதிரி முகாம் புகுந்து
கணப்பொழுதில் எதிரிதனை அழித்து
கரிகாலன் படை நடத்தல் தனிலே
களமாடும் கன்னித் தமிழ் வேங்கைகளே
மாவீரர்கள்

# உமை நினைத்தால்

உமை நினைத்தால்
உத்வேகம் வரும்
உணர்வுகளுக்குள்
எரிமலை வெடிக்கும்
மனதுக்குள்
புயலடிக்கும்
விழிகளில்
மின்னல் வெட்டும்

வாழ்த்துவதற்கு
வார்த்தைகள்
ஊற்றெடுக்கும்
வைரம் பாய்ந்த
சொல் குதிக்கும்
எழுத்துக்கள்
எழுந்து நிற்கும்

தமிழ் வந்து
தவங்கிடக்கும்

தங்கமென்றால்
தரம் உண்டு
வைரமென்றால்
விலை உண்டு
கண்களாகக்
கருதுகின்றோம்
உம்மை
கை தொழுது
பணிகின்றோம்

மங்கையராய் பிறந்தீர்கள்
மலர்கள் போல வளர்ந்தீர்கள்
மான்களாகத் திரிந்தீர்கள்
இன்று வேங்கைகளாய்
எதிரிப் பாசறைகள் தேடி
பாயும் உங்கள் பெரு வலியும்
படை நடத்துகின்ற திறனும்
பகை முடிக்கின்ற துணிவும்

கேட்கும் எங்கள் செவிகளிலே
இடி முழங்கும்
உச்சந்தலையில்
நூறு ஆண்டு குளிர்கால
பனி உறையும்

- ஜெகதீஸ்வரி இராஜரட்ணம்


எரிப்பதற்கோ புதைப்பதற்கோ
மிச்சமேதும் இல்லாமல் காற்றில்,
நீரில், நிலத்தில் கரைந்து
மறைந்துபோன கரும்புலிகளுக்கு
விடுதலை பெற்ற தேசமே
வெற்றிப்பரிசு
விடை கொடுக்கும் பெரும்புலி
பகை முடிக்கும் கரும்புலி.

# எமது சக்தி வாய்ந்த ஆயுதம் எம் போராளிகளின் மனோபலமே



எதிரியின் பலம் பெரிது, ஆயுத பலம் பெரிது, வளமும் பெரிது. இந்த வகையில் இராணுவ சமபலம் எதிரிக்கே சாதகமாக இருந்தது. ஆனால் எதிரியிடம் இல்லாத ஒரு பலம் மட்டும் எம்மிடம் இருந்தது. அதுதான் எமது போராளிகளின் மனோபலம். எமது போராளிகளிடமிருந்த அசைக்க முடியாத மனவுறுதியும் அதனால் பிறக்கும் அபாரமான துணிவுமே வன்னிக்களத்தில் எமது அதிசக்தி வாய்ந்த ஆயுதமாக இருந்தது, மலையாக எதிரியும் மடுவாக நாமும் சமச்சீர்ற்ற இராணுவ நிலையில் நின்ற போதும் இந்த நீண்ட சமரில் எமது போராளிகள் வெளிக்காட்டிய நெஞ்சுறுதியானது எமக்கு மலையான பலத்தைக் கொடுத்தது. அந்த மலையான பலமே வன்னியில் சிங்கள இராணுவ பூதத்தை நிலைகுலைய வைத்தது.

ஓயாத புயலாக ஓராண்டு காலம் நீடித்த இப்பெரும் சமரில் எத்தகைய துன்பங்களைச் சுமந்து, நெருக்கடிக்ளைச் சமாளித்து எத்தகைய ஆபத்துக்களை எதிர்கொண்டு எமது வீரர்கள் மனஉறுதியோடு போராடினார்கள் என்பதை நான் அறிவேன். நெருப்பு மழையாக ஓயாது பொழிந்த பீரங்கி எறிகணைகளுக்கும் மின்னல் வேகத்தில் நடந்த விமானக்குண்டு வீச்சுக்களுக்கும் முகம் கொடுத்து ஓய்வில்லாது உறக்கமில்லாது உருப்படியான உணவில்லாது எமது வீரர்கள் சளைக்காது போரிட்டார்ர்கள். வன்னிக் களத்தில் இயற்கை அன்னையும் எமது போராளிகளுக்கு இரக்கம் காட்டவில்லை. மாரிப் பெருமழையும் உறையவைக்கும் பனியும் கோடையில் கொழுத்தும் வெய்யிலும், பாம்பும் நுளம்பும் மலேரியாவுமாக வன்னிக் காட்டில் கொடுமையான சூழலையும் எமது போராளிகள் சகிக்க வேண்டியிருந்தது.

போரோய்ந்த வேளையிலும் எமது போராளிகள் ஓய்வெடுத்துக்கொள்ளவில்லை. பதுங்குகுழிகள் வெட்டி, பாதுகாப்பு அரண்கள் வெட்டி அந்தக் காப்பரண்களில் குடியிருந்து இரவு பகலாக விழித்திருந்து எமது மண்ணைக் காப்பதில் அவர்கள் உறுதியாக நின்றார்கள்.

(தமிழீழ தேசியத் தலைவரின், ஜெயசிக்குறு சமர் குறித்த சிறப்புச் செய்தியிலிருந்து...)

## மாவீரர்தம் தியாகத்தால் வளர்த்தெடுக்கும்

# அனைத்துலக தமிழ்த்தேசியம்

“ஈழப் போராட்டமானது இந்துமாக் கடல்வலயத்தில் ஓர் உந்துவிசைச் சக்தியாய் விளங்கும்” இதனைக் கேட்கும் பொழுது ஓர் அரசியல் பொன்மொழி போல் தெரிகின்றதா? மேற்கண்ட வாய்ச்சொற்களை பல்வேறு கருத்துக்களின் வழி ஈழப்போராட்டம் அலைக்கழிக்கப்பட்ட, எண்பத்தேழாம் ஆண்டிற்கு முன்னான பொழுதில் சிலர் உதிர்த்திருந்தனர். கேட்க மயக்கமூட்டும் இவ் வாய்ச் சொற்களில் வரும் ‘இந்துமாக் கடல் வலயம்’, ‘ஈழப்போராட்டம்’ என்னும் கருத் தாக்கங்களில் ‘அகண்ட இந்தியத் துணைக் கண்ட’ கனவின் அரசியல் நலனே மறைந்திருந்தது. ஏனெனில் இதனைத் தொடர்ந்து வந்த ஆண்டுகளில் இச் சொற்களை உதிர்த்தோர் எடுத்த நிலைப்பாட்டின் மூலம் அதனைத் தெரிந்துகொள்ள முடிந்தது. தமிழீழ விடுதலைப் புலிகளின் யாழ். மாவட்ட அரசியல் பொறுப்பாளரான திலீபன் சாத்வீகத்தை கையிலெடுத்து மன உறுதியை, ஈகத்தை புலிப் போராளிகளின் குறியீடாக முன்னிறுத்திய வேளையில் இவ்வகையான எல்லாக் கருத்தாடல்களும் அம்மணமாகிப் போயின. வாய்ச்சொல்லுக்கும் செயலுக்குமான இடைவெளியினை இட்டு நிரப்பியிருந்த இக் கருத்தாடற் கர்த்தாக்களின் முகத் திரைகளும் கிழித்தெறியப்பட்டன. அத்துடன் தியாகி திலீபனின் அறப்போரும், மரணத்தைத் தழுவிய மன உறுதியும் அனைத்துலகின் மனச்சாட்சியை உலுக்கியது. இவ்வேளையில்தான் அனைத்துலகத் தமிழ்த் தேசியமும் உருவாகி வடிவம் பெறத்தொடங்கியது எனலாம்.

தமிழ்த் தேசியம் என்னும் அரசியல் உணர்வு தமிழ் நாட்டில் சுயமரியாதை இயக்கத்தின் தோற்றத்துடனும் ‘திராவிட நாடு’ கோரிக்கையுடனும் எழுச்சியுற்றது. இது தமிழ்நாட்டில் மட்டுமல்லாது தமிழ் பேசும் மக்கள் வாழும் ஏனைய சில நாடுகளிலும் தன் செல்வைக்கைச் செலுத்தியது. பெரியார் ஈ. வே. ரா. அவர்களை இத் தமிழ்த் தேசிய எழுச்சியின் பிதாமகர் எனலாம். தமிழ் மொழியை, அதன் பண்பாட்டை, மக்களை அடிமைப்படுத்தியோர் வடவர், பார்ப்பனியம் என அடையாளம் காட்டி எழுச்சியை ஊட்டினார். தமிழர்களின் விழுமியங்களை, வேர்களை அடையாளம் காட்டுவதில் பெரியார் ஈ. வே. ரா அவர்கள் முனைந்து செயற்பட்டார். அதேவேளை 15ம் நூற்றாண்டில் இந்துமா கடலில் தம் ஆதிக்கத்தை ஐரோப்பிய தேசியத்தார் நிறுவியபோது தமிழ் பேசும் மக்கள் உலகளாவிய புலப்பெயர்வுக்கு உள்ளாகினர். ஐரோப்பியரின் பொருளாதாரத் தேவைகளுக்காக வேறு தேசங்களுக்கு இழுத்துச்செல்லப்பட்ட அவர்கள் அங்கு கூலிகளாக குடியமர்த்தப்பட்டனர். அடிமை வாழ்வை மேற்கொண்டனர். இங்கெல்லாம் தமிழ்த் தேசிய அவா மிகுந்திருந்தது. இவர்களையெல்லாம் இணைத்ததான உலகத் தமிழ்த் தேசியத்தை கட்டியெழுப்பும் வாய்ப்பு பெரியாரிடம் இருந்தது. இலங்கை, மலேசியா போன்ற நாடுகளில் வாழ்ந்த தமிழர்களை எல்லாம் அவர் சென்று சந்தித்தார். இருந்தபோதும் இவ்வகை நோக்குக்கான முழு வேலைத்திட்டம் அவரிடம் இருந்ததாகத் தெரியவில்லை. ஏனெனில் கடவுள் மறுப்பு, தத்துவச் சிந்தனை, சமூக சீர்திருத்தம் என்பவற்றில் அவரது அக்கறைகள் அழுத்தம் கொண்டதனால், தமிழ்த் தேசியம் அவரது நிகழ்ச்சி நிரலில் பின்தள்ளப்பட்டு விட்டது போலும். அதேபோதில் பெரியாரின் சீடர்கள் எனக் கூறிக்கொண்டே பின் வந்தவர்கள் தமிழ்த் தேசியத்தை அழகுமொழி அடுக்குமொழி என பேச்சிலும் எழுத்திலும் மாத்திரம் பயன்படுத்தியதுடன் பதவி நாற்காலிகளுக்கான படிக்கட்டுகளாக மட்டுமே பயன்படுத்திக்கொண்டனர். பெரியார் காலத்தில் எழுச்சிகொண்ட தமிழ்த் தேசியம் இவர்களின் நடத்தைகளினால் நீர்த்துப் போய்விட்டது கவலைக்குரியதொன்றாகும்.

கி. பி. அரவிந்தன்

இலங்கைத் தீவில் தமிழ்த் தேசியம் எழுச்சி பெற்றதை 1956–ம் ஆண்டென்றே கொள்ளலாம். இன்றைய சிறீலங்காவின் அதிபர் சந்திரிகாவின் தந்தையாரான சலமன் றிட்ச்வே டயஸ் பண்டாரநாயக்கா அவர்களினால் 24 மணி நேரத்தில் ‘தனிச் சிங்களச் சட்டம்’ என அறிவித்தபோது இலங்கைத் தீவு இரண்டு தேசியங்களைக் கொண்டது என்பது வெளியரங்கமாயிற்று. ஆங்கிலேய ஆட்சிக் காலத்தில் மறுமலர்ச்சி பெறத் தொடங்கிய சிங்களத் தேசிய உணர்வு மிக விரைவாகவே பேரினவாதம் என்னும் கோர முகத்தை பெறத்தொடங்கியது. தேசியம் என்பதன் அர்த்தமாக துட்டகெமுனுவின் பிம்

பத்துள் தங்கள் அரசியல் தலைவர்களை வைத்துப் பார்க்கும் பேரினவாத அரசியல் பார்வையும் முகிழத் தொடங்கியது. இவ் வேளையில்தான் எதிர்வினையாக தமிழ்த் தேசிய உணர்வும் எழுச்சிபெறத் தொடங்கி யது. அந்நியர் வருகையினால் தடைசெய் யப்பட்டு நிறுத்தப்பட்ட தமிழ் பேசுவோரின் விழுமியங்களையும் வேர்களையும் தேட வேண்டியதன் அவசியத்தை தனிச் சிங்களச் சட்டம் தோற்றுவித்தது. இந்த தமிழ்த் தேசிய உருவாக்கத்தை உடைப்பதில் சிதைப்பதில் சிங்களப் பேரினவாதம் அரச இயந்திரத் தையும் சிங்கள மொழிச் சமூகத்தையும் பயன் படுத்திக்கொண்டது. தமிழ்த் தேசியமோ இதனை எதிர்கொள்வதற்கான ஆற்றலும் அதனை வளர்க்கும் தலைமையும் இல்லாமல் திணறியது.

*1974*–ம் ஆண்டு ஜூன் 5–ல் உரும்பிராய் பொன். சிவகுமாரன் நஞ்சுண்டு தன் உயிரை ஈகம் செய்தன் மூலம் அதுவரையான தமிழ்த் தலைமையின் வெற்றுத்தனத்தை தோலுரித் துக்காட்டியதுடன் தமிழ்த் தேசியத்தின் எதிர்காலத் தலைமைக்கான தகமையையும் கோரியிருந்தான். அவன் இலங்கைத் தீவின் வரலாற்றுப் போக்கின் ஒரு திருப்புமுனையை அறிவித்தவன் ஆகினான். அவன் எதிர்பார்த்த தமிழ்த் தேசியத்தின் ஆற்றலும் தலைமையும் தமிழீழ விடுதலைப் புலிகளே என்பதனை *19983*–ல் திருநெல்வேலியில் மேற்கொள்ளப் பட்ட வெற்றிகரமான இராணுவ நடவடிக்கை உலகுக்கு அறிவித்தது. *1987*–ல் இந்தியா தன் ஆதிக்கத்தை இலங்கை – இந்திய உடன்பாட் டினூடாக இலங்கைத் தீவில் நிலைநிறுத்த முனைந்தபோது இலங்கைத் தமிழ்த் தேசியத் தின் ஆற்றலும் தலைமையும் மிகத் தெளி வாக வரையறையானது. இதனை தியாகி திலீபன் தன் தியாகத்தின் மூலம் வரலாற்றின் மற்றுமோர் திருப்புமுனையாக உலகிற்கு தெரிவித்தான். இவ்வேளையில்தான் தமிழ்த் தேசியம் முக்கியமான காலகட்டத்துள் நுழைந்தது. தமிழ்நாடு, இலங்கை என்ற மட்டத்தில் குறுகியிருந்த தமிழ்த் தேசியம் உலகளாவிய உணர்வுடனும் நம்பிக்கையுட னும் ஒருங்கிணையத் தொடங்கியது. தமிழீழ விடுதலைப் புலிகளின் தலைவர் வேலுப் பிள்ளை பிரபாகரன் அவர்கள் உலகளாவிய தமிழ்த் தேசியத்தினால் ஆற்றல்மிக்க தலை வராக தமிழ்த் தேசியத்தின் தலைவராக அடையாளம் காணப்பட்டார். 'தமிழர் இல்லா நாடில்லை. இருந்தும் தமிழருக்கு என்றோர் நாடில்லை' என்ற உலகளாவிய தமிழ்த் தேசியத்தின் ஏக்கமும் கனவும் இலங் கைத் தீவில் எழுந்த தமிழ்த் தேசியத்தின் உயிர்ப்பினால் நம்பிக்கை கொள்ளத் தொடங் கியது. இந்த தமிழ்த் தேசியத்தின் ஆற்றலை அவ்வெழுச்சிக்கான உயிர்ப்பையும் வழங்கி யவர்கள் தங்கள் இன்னுயிர் ஈந்த மாவீரர் களே. ஆதலால் உலகளாவிய தமிழ்த் தேசி யத்தின் சிற்பிகள் இவர்களே ஆவர்.

அவர்கள்

'கரந்துறைந்துலவினர்
இரத்தத்தில் நனைந்தனர்
உடலம் புதைத்தனர்
உள்ளம் உயிர்த்தனர்
ஓர்மம் வளர்த்தனர்
ஔடதம் ஆகினர்
நெடும் பாலை வெளிதனிலோ
ஒளிரும் பாதையாகினர்'

## நம் நெஞ்சங்களில் கோயில் கொண்டிருக்கும் மாவீரர்கள்!

தமிழீழ மண் விடுதலை பெறுவதற்காக மட்டும் தங்களின் இன்னுயிர்களை ஈந்து, விடுதலைப் புலிகள் வரலாற்றில் என்றும் அழியாத இடத்தைப் பெறவில்லை. மாறாக தமிழர் தேசியம் தழைக்கவும் உலகத் தமிழினம் விழிப்புற்று எழவும் அவர்கள் தியாகம் புரிந்திருக்கிறார்கள்.

மாவீரர்களின் தியாகம் மகத்தானது ஈடு இணையில்லாதது. வாழவேண்டிய இளம் வயதில் வாழ்வின் வசந்தத்தைத் துறந்து தாயக மண்ணோடு மண்ணாக இரண்டறக் கலந்து விட்டார்கள். இதை எண்ணும்போதே சிந்தனை சிலிர்க்கிறது, இதயம் கனக்கிறது, விழிகள் நனைகின்றன.

தொன்மையும் பெருமையும் மிக்க தமிழர்களின் வரலாற்றில் புகழ் மிகுந்த ஓர் அத்தியாயம் எழுதப் பெற்று வருகிறது. இதற்கு முன்னும் – பின்னும் இப்படியொரு நிகழ்வு நடைபெற்றதும் இல்லை, நடைபெறப்போவதும் இல்லை.

தமிழீழத் தேசியத் தலைவர் தம்பி பிரபாகரன் தலைமையில் விடுதலைப் புலிகள் இயக்கத்தைச் சேர்ந்த இளைஞர்களும் – யுவதிகளும், 'வீரமே ஆரமாக தியாகமே அணியாகப் பூண்டு' படைத்துவரும் உன்னதமான வரலாறு உலகத்தமிழினத்தைப் பெருமிதம் கொள்ள வைத்துள்ளது.

மாவீரர் மறக்கப்பட முடியாதவர்கள். நன்றி மறவாத நற்றமிழர் நெஞ்சங்களில் கோயில் கொண்டிருக்கும் அவர்களை நித்தமும் வணங்குவோம்.

- பழ. நெடுமாறன்

தலைவர் தமிழர் தேசிய இயக்கம்



# கவிதை எழுத என்ன வேண்டும்?

படிக்கும் போது
யாப்பிலக்கணத்தில் முதல் மதிப்பெண்
புதுக்கவிதைகளும் எழுதுவதுண்டு

கவிஞர்கள் கோபிக்காமல் இருந்தால்
ஓர் உண்மை சொல்வேன்.
உரைநடை எழுதச் சிரமப்படும் நான்
உடனே எழுதுவேன் கவிதை என்றால்

ஈற்றடி தொடுத்தால்
சுடச்சுட வெண்பா
அவசரமில்லாமலும்
ஆசிரியப் பாக்கள்
எழுதிக் குவித்த நாட்களும் உண்டு.

இயற்கையின் சீற்றம்
எழில்மிகு மலைகள்
அனைத்தையும் அடக்கலாம்
அழகிய பாக்களில்
எளிது எளிது
கவிதையை ஆக்கல் எளிது
என்றுதான் நான் எண்ணியிருந்தேன்.

ஆயிற்று நாட்கள் ஐந்தாறு
ஆனாலும் என்னால் இயலவே இல்லை.
ஒரே ஒரு தலைப்பில்
ஒற்றைக் கவிதை
எழுதி முடிக்க என்னால் இயலவே இல்லை.

வெள்ளைத் தாள்கள் விரிந்து கிடந்தன
எழுதுகோல்களும் எதிரில் இருந்தன
என்றாலும் என்னால் இயலவே இல்லை.

கற்பனையிருந்தும் காகிதம் இருந்தும்
எழுதும் பயிற்சி ஏராளம் இருந்தும்
தோற்றேன் தோற்றேன் பலமுறை தோற்றேன்.

கவிதை எழுத
வேறு என்னதான் வேண்டும்?

உள்ளேயிருந்து ஒரு குரல் கேட்டது
'எல்லாம் உள்ளது என்கின்றாயே
மாவீரர்களின் தியாகம் எழுத
என்ன தகுதி உன்னிடம் உள்ளது?'

என்னால் கவிதை
எழுத முடியவில்லை.

சுப. வீரபாண்டியன்

